இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில்: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

மூன்றாவது ஆண்டு நிறைவை கொண்டாடுகிறது
Celebrating third year of bringing you the news

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 01 சோபகிருது வருடம், ஆனி மாதம் 07ஆம் திகதி வியாழக்கிழமை
(22.06.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 03, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

BEAT THE HEAT The Reliable Fan
1st June to 30th June 2023
DISCOUNT 15% (On selected models only) *Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# பொலிஸாரே தாக்கினர்!

## தடுப்பில் இருந்தபோது உயிரிழந்த பணிப்பெண் ராஜகுமாரி தொடர்பில் நீதிமன்றத்தில் முக்கிய சாட்சி வழங்கப்பட்டது

நா.தினுஷா

வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் இருந்தபோது உயிரிழந்ததாகக் கூறப்படும் வீட்டுப் பணிப்பெண் ராஜகுமாரி, பொலிஸாரால் தாக்கப்பட்டதை நேரில் கண்டதாக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (21) சாட்சியம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தப் பணிப்பெண்ணின் மரணம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையை எதிர்வரும் 26ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவல உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மெரில் ரஞ்சன் லமாஹேவா உள்ளிட்ட குற்றப் புலனாய்வு... 02 பக்கம்

# 194 பாடசாலைகள் வடக்கில் மூடல்

## ஆளுநர் சார்ள்ஸ் தகவல்

சி. திவியா

வடக்கில் 194 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் வவுனியாவில் நேற்று (21) தெரிவித்தார். கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

மாணவர் வெற்றிடம் என்ற விடயம்... 02 பக்கம்

# ஐ.நா. பேரவையுடன் இணைந்து செயற்படுக

## இணை அனுசரணை நாடுகள் இலங்கைக்கு வலியுறுத்து

நமது நிருபர்

UNHRC

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் இலங்கை அதிகாரிகள் இணைந்து செயற்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ள இணை அனுசரணை நாடுகள், இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கத் தயாராகவுள்ளதாக அறிவித்துள்ளன.

காணிகளை மீளளித்தல், நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் மற்றும் ஊழல் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கான... 02 பக்கம்

# ஆபத்தாகும் மண் காய்ச்சல்

நா. தினுஷா

மெலியோய்டோசிஸ் அல்லது மண் காய்ச்சல் என்றழைக்கப்படும் நோய் தற்போது நாட்டின் பல்வேறு மாகாணங்களில் பரவலடைந்து வருவதாகவும் இதனால் உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாகவும் இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நோய் மழை காரணமாக மண் மற்றும் நீரில் உருவாகும் பற்றீரியாவினூடாக பரவலடைகிறது. இந்த பற்றீரியா கால்களில் இருக்கும் காயங்கள், அசுத்தமான நீரை அருந்துதல் போன்றவற்றினூடாக உடலுக்குள் ஊடுருவுவதாகவும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் பல்வேறு பாகங்களிலும் குறிப்பாக வடமேல் மாகாணம், புத்தளம், கம்பஹா மற்றும்... 02 பக்கம்

# ஜனாதிபதித் தேர்தல் முதலில் இடம்பெறும்

## சப்ரகமுவ ஆளுநர் நவீன் தெரிவிப்பு



நா.தினுஷா

நாட்டில் தற்போதைய நிலையில் தேர்தல் எதுவும் இடம்பெறாது. அதற்கான ஆயத்தங்கள் எதுவும் இல்லை. 02 பக்கம்

# மலையக காணியுரிமையின் ஆரம்பப்புள்ளி 07பேர்ச் நிலம்

## ஹட்டனில் மனோ எம்.பி. சுட்டிக்காட்டு



மலையக தமிழர்களின் காணி உரிமை போராட்டத்தின் ஆரம்பப்புள்ளி ஏழு பேர்ச் நிலம் ஆகும். அப்போதைய மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சர் திகாம்பரத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரமே இது தொடர்பான... 02 பக்கம்



முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு குருந்தூர்மலைக்கு பிவித்துரு ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் வருகைக்கு எதிராக மக்கள் பிரதிநிதிகளும் கிராம மக்களும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவித்து அங்கு மக்களை மீள்குடியேற்றுமாறு அவர்கள் வலியுறுத்தினர். **படப்பிடிப்பு:** *யாழ். செய்தியாளர்*

# மேலதிக சொத்து பணம் கிடையாது

## விசாரணைகளுக்கு அஞ்சமாட்டோமென்கிறார் நாமல்



நா.தினுஷா

"நான் உள்ளிட்ட ராஜபக்ஷக்களில் யாருக்காவது இலங்கை, உகண்டா, டுபாய்... 02 பக்கம்



உஷ்

ஜனாதிபதி ரணில் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பியதும் அமைச்சரவை மாற்றமொன்று இடம்பெறுமென செய்திகள் வெளியாகின்றன.

ஊடகம், சுகாதாரம் விளையாட்டுத்துறை, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பதவிகளில் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் சொல்லப்படுகிறது.


கமெண்ட் கந்தர்...



என்னது மேலதிகமா ஏதும் இல்லையா ? இதை இட்லி என்று சொன்னால் சட்னியும் நம்பாதே..!

# கட்டுப்பாடு என்ற பெயரில் ஒடுக்கப்படும் ஊடகங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சபையில் குற்றச்சாட்டு



நாட்டில் கட்டுப்பாடு என்ற பெயரில் அரசை விமர்சிக்கும் ஊடகங்களை ஒடுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் நேற்று (21) குற்றஞ்சுமத்தினார்.

பாராளுமன்ற சபை அமர்வு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ஆரம்பமானபோது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, 02 பக்கம்

முன்னேற்றப் பாதையில்

03 ஆண்டுகள்

அழைப்பிதழ்

தமிழன்

பத்திரிகையின் 3ஆவது அகவை நிறைவு விழாவை மிகச் சிறப்பாக கொண்டாடுவதற்கு தங்களை அன்போடு அழைக்கிறோம்.

இடம்:
பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம்

திகதி:
23 ஜூன் 2023

நேரம்:
மாலை 5 மணி

தமிழன் தமிழன்

RSVP: 0711 388 618

## பொலிஸாரே...

திணைக்கள அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் சாட்சியமளித்த மகேந்திரன் சுரேஷ் என்பவர் வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்குள் ராஜகுமாரி, பொலிஸ் உத்தியோகத்தரால் தாக்கப்பட்டதை தான் பார்த்ததாக தெரிவித்தார்.

மேலும், புறக்கோட்டை பிரதான பேருந்து நிலையத்துக்கு அருகில் ஒருநாள் இருந்தபோது இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வந்து தன்னை கைவிலங்கிட்டு வாகனத்தில் ஏற்றி பொரளை கொட்டா வீதியில் ராஜகுமாரி பணிபுரிந்த வீட்டுக்கு அழைத்துச் சென்றதாக அவர் சாட்சியமளித்துள்ளார்.

அதன் பின்னர் ராஜகுமாரியை அழைத்துவந்து தனது கைவிலங்கின் மறுபகுதியை அவருக்கு மாட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு அழைத்துச் செல்லும் போது ராஜகுமாரி ஆரோக்கியமாக இருந்ததாகவும் அவருக்கு உடல் நல குறைபாடு ஏதும் இருக்கவில்லை எனவும் நன்றாக நடந்து வந்ததாகவும் சாட்சி கூறினார்.

வாகனத்தில் இருந்த பொலிஸ் அதிகாரி ராஜகுமாரியிடம் மோதிரம், வாசனைத் திரவியம், செருப்பு ஆகியவற்றைத் நீங்கள் தானே திருடிச் சென்றீர்கள் என்று கேட்டதாக சுரேஷ் சாட்சியம் அளித்துள்ளார்.

அதன் பின்னர் தன்னையும் ராஜகுமாரியையும் வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்ததாகவும் அங்கிருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தம்மையும் ராஜகுமாரியையும் தாக்கியதாகவும் அவர்களுள் ஒருவர் மொட்டைத் தலையுடையவர் எனவும் மற்றைய அதிகாரி மெலிந்து உயரமானவர் எனவும் சாட்சியாளர் தெரிவித்தார்.

இறந்த ராஜகுமாரியை, ஒல்லியான உயரமான அதிகாரி இறப்பர் தடியால் தாக்கியதை தான் நேரில் பார்த்ததாகவும் சாட்சி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், சுதர்மா மேடம் வந்து தன்னைத் தாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதாகவும் பிரச்சினையைத் தீர்க்குமாறு கேட்டுக் கொண்டதாகவும் சாட்சி மேலும் கூறியுள்ளார்.

இதனைக் கேட்டறிந்த நீதவான் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை வழக்கு விசாரணையை ஒத்திவைத்ததுடன் விசாரணை தொடர்பான முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## ஐ.நா. பேரவையுடன்...

பிரித்தானிய தூதுவர் ரீட்டா பிரெஞ்ச் வரவேற்றுள்ளார்.

இது தொடர்பில் இணை அனுசரணை நாடுகளால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் இன, மத வேறுபாடுகளைத் தவிர்த்து அனைவரிடனதும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தைத் தொடர்ந்து பயன்படுத்துவது தொடர்பில் கவலையடைவதாகவும் அதனை மாற்றுவதற்கான புதிய சட்டம் சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவானது என்பதை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்துவதாகவும் ரீட்டா தெரிவித்துள்ளார்.

இலங்கை, நல்லிணக்கத்துக்கான உறுதிப்பாட்டை முன்னெடுத்துச் செல்லும்போது வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறல், கடந்த கால முரண்பாடுகளுக்கான மூல காரணங்களை அகற்றுதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து கரிசனை கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## ஆபத்தாகும்...

குருநாகல் ஆகிய மாவட்டங்களிலும் இந்தநோய் பதிவாகியுள்ளதாக வைத்தியர் ரோஹிணி வடநம்பி தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ சங்கத்தில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நோய் ஏற்படும் அநேகமானவர்களுக்கு நியுமோனியா நிலைமை ஏற்படும். அநேகமானவர்களுக்கு, சுவாசப்பை உள்ளிட்ட உடல் உறுப்புகளில் சிறு கட்டிகள் உருவாவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. கால்களில் சிவப்பு கட்டிகள் தோற்றம்பெற்று சிவப்பு நிறமாகலாம். மூளைக் காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் இந்த நோய் ஏற்படலாம். இந்த நோய் ஒரு முறையில் தான் ஏற்படும் என்று வரையறுத்து கூற முடியாது. இந்த நோய்க்காக தொடர்ச்சியான சிகிச்சை வழங்கிவந்தாலும் கூட, நோய் நிலைமை தீவிரமடையும் போது நோயாளர்கள் உயிரிழப்பதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன.

மழைகாலங்களில் ஏற்படும் நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு என்பற்றில் மக்கள் சிக்கலாம். அதன்போது, கால்களில் இருக்கும் சிறிய காயங்களினூடாக வெள்ளப்பெருக்கு நீர்போன்றவை உடம்பினுள் செல்லுபோது இந்த பற்றீரியத உடலுக்குள் செல்லலாம். அவ்வாறு செல்லும் இந்த நுண்ணங்கி சிறிது காலம் உடம்பில் தங்கியிருக்கும். உடம்புக்குள் சென்றதும் தாக்கத்தை ஏற்படுத்தாது.

நீரிழிவு, சிறுநீரக நோய், தலசீமியா போன்ற நோய்கள் இருப்பவர்களுக்கு இந்த நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வீதம் சற்றும் குறைவாகவே இருக்கும். மேலும், நீண்டகாலமாக மது அருந்துபவர்கள், புகைத்தல் பழக்கமுள்ளவர்களுக்கும் இந்த நோய் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வைத்தியர்களுக்கும் இந்த நோய் தொடர்பில் விழிப்புணர்வு இல்லை. நியூமோனியா என்று எண்ணி அதற்கான சிகிச்சையை வழங்கும்போது நோய்நிலை தீவிரமடைந்து அது உயிரிழப்பை ஏற்படுத்தலாம். இந்த நோய்நிலைமை நாடு முழுவதிலும் பரவலடைந்து காணப்படுகிறது. மழைகாலத்தில் இந்த நோய் அதிகம் பரவலடைவதுடன் நோயாளர்களும் அடையாம் காணப்பட்டுள்ளனர்.

எனவே, முகக்கவசம் அணிந்து பாதுகாப்புடன் செயற்படுவதும் சுத்தமான நீரை பருக வேண்டியதும் அவசியமாகும் என்றார்.

## மேலதிக...

போன்ற நாடுகளில் மேலதிக பணம் அல்லது சொத்துகள் இருப்பதாக யாராவது கருதுவார்களாக இருந்தால், அதை மறுத்து சத்தியக் கடதாசி வழங்க தயாராக இருக்கிறேன். அதனை ஆதாரமாக க் கொண்டு தகவல்களைத் திரட்ட முடியும். எனது சொத்து விபர அறிக்கையில் இல்லாத சொத்துகள் வேறு நாடுகளில் இருக்குமாக இருந்தால் அவற்றை அரசுடைமையாக்கிக்கொள்ள முடியும். நாங்கள் தவறிழைக்காதவர்கள் என்பதால் எந்தவொரு சட்டத்துக்கும் விசாரணைகளுக்கும் அச்சங்கொள்ள மாட்டோம்" என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (21) ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கருத்துத்தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை ஏற்பதற்கான எதிர்பார்ப்பு எனக்கு இல்லை என்பதை ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்ட தினத்தன்றே பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தேன். அதற்கு காரணங்கள் இருக்கின்றன. கட்சி என்ற அடிப்படையில், கட்சி ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. எமது ஆதரவாளர்களை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் அதனை முறையாக செய்ய கிடைக்கவில்லை. மேலும், முன்னாள் ஜனாதிபதியை நம்பி பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்த மக்களின் ஆணையை பாதுகாக்கும் உரிமை எனக்கும் இருக்கிறது.

சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவது தவறில்லை. அதுதொடர்பில் ஜனாதிபதி தீர்மானம் எடுக்கவேண்டும். ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டபோதே பெயர் பட்டியலொன்றை அனுப்பி வைத்திருந்தோம். பொருளாதாரம் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும்போது மக்களுக்கான சாதக பாதகங்களை ஆராய்ந்து தீர்மானங்களை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

மின்சார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்வது தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது அரசாங்கத்தினது பொறுப்பாகும். குறிப்பாக குறித்த நிறுவனங்களில் சேவையாற்றும் பணியாளர்களுக்கு கிடைக்கும் நன்மைத் தீமைகள், அவர்களுக்கான நிவாரணம் என்பதை பாராளுமன்றத்துக்கும் நிறுவனங்களிலுள்ள பணியாளர்களுக்கும் மக்களுக்கும் அறிவிக்கவேண்டும். அரசாங்கத்தில் இருக்கிறோம் என்பதற்காக சகல தீர்மானங்களுக்கும் இணங்க முடியாது.

ஊழல் ஒழிப்பு சட்டம் தொடர்பில் எந்த சிக்கலும் இல்லை. ஆனால், பிரஜை ஒருவர் தொடர்பில் போலியான ஊழல் குற்றச்சாட்டை முன்வைத்து அவர் மீது சேறுபூச முயற்சிக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில் தற்போதே இந்த சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாங்கள் தவறிழைக்கவில்லை என்பதால் எந்தவொரு சட்டத்துக்கும் விசாரணைகளுக்கும் அச்சங்கொள்ள மாட்டோம். நல்லாட்சி அரசாங்கத்தில் எங்கள் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்குள் அவ்வாறே இன்று இடம்பெற்று வருகின்றன. ராஜபக்ஷக்களில் யாருக்காவது இலங்கை, உகண்டா, டுபாய் அல்லது உலகின் வேறு நாடுகளின் வங்கி கணக்குகளில் பணம் இருப்பதாக எவராவது கருதுவார்களாக இருந்தால் நான் சத்தியக் கடதாசி தருகிறேன். அதனை ஆதாரமாகக் கொண்டு தகவல்களை திரட்ட முடியும். அதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் பின்னால் சென்று அரச நிறுவனங்களை விற்க வேண்டிய அவசியமில்லை. நான் வெளியிட்டுள்ள சொத்து விபர அறிக்கையில் இல்லாத சொத்துக்கள் என்னிடம் இருக்குமாக இருந்தால் அதற்கு சத்தியக் கடதாசி தருகிறேன். அதற்கமைய, அந்த சொத்துக்களை அரசுடைமையாக்கிக்கொள்ள முடியும் என்றார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.06.20
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5151
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 18,126,825.00
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 7 0 6 3 6 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3393
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,506,747.60
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 04 05 19 36

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1606
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,796,013.12
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 0 0 7 4 8 8

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1181
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,863,110.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 31 42 61 65

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 460
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,761,796.80
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 06 23 37 50
விசேட இலக்கினம் துலாம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1499
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 330,865,026.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து V
சுப்பர் இலக்கம் 21
வெற்றி இலக்கங்கள் 13 15 18 44

# ஊடகங்களை முடக்குவதற்கு முயற்சிப்பதை தவிர்க்கவும்

## அரசுக்கு டலஸ் எம்.பி. ஆலோசனை ; கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு அமைச்சர் மனுஷ அழைப்பு

அரசாங்கத்தின் தனிப்பட்ட நோக்கங்களுக்காக ஒளி, ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலம் போன்றவற்றை கொண்டுவந்து ஊடக நிறுவனங்களையும் ஊடகவியலாளர்களையும் முடக்க முயற்சிக்க வேண்டாம் என்றும் அதற்காக கடந்த காலங்களில் நாட்டில் கொண்டுவரப்பட்ட ஏற்பாடுகள் குறித்து ஜனநாயக நாடுகளில் பின்பற்றப்படும் முறைகளை பின்பற்றுமாறும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும நேற்று (21) சபையில் வலியுறுத்தினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் மனுஷ நாணயக்கார, இந்த சட்டமூலம் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருதாகவும் அதில் சகலரும் பங்குபற்ற முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இந்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த டலஸ் அழகப்பெரும எம்.பி, ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் பேராசிரியர் ரொஹான் சமரஜீவவினால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்த குழு நீண்டகாலம் சகல ஊடக நிறுவனங்களுடனும் கலந்துரையாடி சிறந்த அறிக்கையொன்றையும் சமர்ப்பித்திருந்தது. இந்நிலையில், தற்போது முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலத்தில் இருக்கும் பராதூரமான குறைபாடுகள் குறித்து பேராசிரியர் ரொஹான் சமரஜீவ அண்மையில் விளக்கமளித்திருந்தார்.

டெலிகொம் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவினூடாக நிலைப்பாடொன்றை முன்வைப்பதற்கும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக முன்வைத்த நிலைப்பாட்டையே பயன்படுத்தியிருந்தார்கள். அதாவது அவரின் நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் மௌனம் காக்கிறது.

இரண்டாவது விடயம், நான் வெகுசன ஊடக அமைச்சராக இருந்த காலப்பகுதியில் இங்கிலாந்து போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் தொழிமுறையான ஊடகவியலாளரை உருவாக்குவதற்காக பத்திரிகையாளர்களுக்கான பட்டய நிறுவனமொன்றை உருவாக்குவதற்காக அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொண்டிருந்தோம். இது தொடர்பில் மீண்டும் மூன்றுமுறை அமைச்சரவை அனுமதிகளைப் பெற்றுக்கொண்டோம். இந்தச் சட்டமூலத்தினூடாக தொழில் முறைய ரீதியாக ஊடகவியலாளரை உருவாக்குவதே நோக்கமாக இருந்தால், அவற்றை பயன்படுத்தியிருக்க முடியும். தொழில் முறையான ஊடகவியலாளர்களை உருவாக்கும் அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் புதியதொரு சட்டமூலத்தை கொண்டு ஏற்றுக்கொள்ள முடியாது.

இறுதியாக, ஜனாதிபதிக்கும் தனியார் ஊடகமொன்றுக்கும் ஏதாவது முன்விரோதம் இருக்கிறது. எனவே, நான் எண்ணும் வகையில் அவற்றை ஈடு செய்துகொள்ளவா இந்த சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த சட்டமூலம் தொடர்பில் ஊடக நிறுவனங்கள் மத்தியில் பரந்துபட்ட கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டும். அதற்கு ஆதரவு வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம். நவீனமயமாகியுள்ள உலகளாவிய ஊடகத்துறையில் ஒழுங்குபடுத்தல் அவசியம் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், அபிவிருத்தியடைந்த ஜனநாயக நாடுகளில் பின்பற்றப்பட்ட முறைகள் இருக்கின்றன. தயவு செய்து அவற்றை பின்பற்றவேண்டியது அவசியமாகும். அவ்வாறு இல்லாவிட்டால், இதனை ஊடக நிறுவனங்களையும் ஊடகவியலாளர்களையும் முடக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியாகவே கருதவேண்டி ஏற்படும் என்றார்.

இதற்கு பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் மனுச நாணயக்கார,

இதுபோன்ற சந்தேகம் ஏற்படுவதில் எந்த பிரச்சினையும் இல்லை. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துரிமை சுதந்திரத்தை பாதுகாப்பதே தற்போது தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தின் முதலாவது நோக்கமாகும். இரண்டாவது நோக்கம், அரசியலமைப்பின் சரியான தகவல்களை தெரிந்துகொள்ளும் உரிமையை மேலும் பலப்படுத்துவதாகும்.

இந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. தகவல் அறிந்துகொள்ளும் உரிமை மக்களுக்கு இருக்கிறது. மறுபுறம் தவறான தகவல்கள் வெளியிடும்போது ஊடகங்களுக்கு ஒழுங்கு விதிகளை விதிக்கவேண்டும் என்பதை ஆளுந்தரப்பு உள்ளிட்ட இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

வரலாற்றில் உருவாக்கப்பட்ட சுயாதீன ஊடக ஆணைக்குழு யோசனை தொடர்பில் பல்வேறு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றும் அதுதொடர்பில் ஒருமித்த தீர்மானமொன்றுக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாகவே, இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டு மேம்பாட்டாளர்களிடம் ஒப்படைத்துள்ளோம். அதனூடாக திருத்தங்களை மேற்கொண்டு சட்ட ரீதியான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காகவே இந்த சட்டமூலத்தினூடாக முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

பேராசிரியர் ரொஹான் சமரஜீவ இதுதொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடல்களிலும் பங்கேற்றிருந்தார். அதன்போதே அவரால் முன்வைக்கப்பட்ட கருத்துகளுக்கமையவே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புக்கு முரணான எந்த ஏற்பாடுகளும் இதில் இல்லை. மேலும், இதுதொடர்பான கலந்துரையாடல்களும் தற்போது இடம்பெற்றுவருவதுடன் அதில் கலந்துகொள்வதற்கான அனுமதி சகலருக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## கட்டுப்பாடு...

ஒரு நாட்டின் வெகுஜன ஊடகங்கள் என்பது மக்களது ஜனநாயகத்தின் நான்காவது தூணாகும்.ஆட்சியாளருக்கும் மக்களுக்கும் இடையில் மத்தியஸ்தத்தை பேணுவதும் இந்த ஊடகங்கள் தான். எனவே,வெகுஜன ஊடகங்கள் நாட்டின் நல்வாழ்வுக்கு மிகவும் சிறப்பான வகிபாகத்தை ஆற்றுகின்றன. சகல ஊடகங்களுக்கும் ஒரே இடத்தில் தகவல்களை வழங்கத் தேவையான நடைமுறை கட்டமைக்கப்பட வேண்டும்.

ஊடகவியலாளர்கள் தகவல்களைத் தெரிவிக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும். தகவல் மூலங்களைப் பாதுகாக்க ஊடகங்களுக்கு உரிமையுள்ளது. இருப்பினும், இலத்திரனியல் ஒளிபரப்பு நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக சில குறிப்பிட்ட சட்டம் இருக்க வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஓர் காரணமாகும். என்றாலும், இதற்கான அரசின் தலையீடு வரையறையுடன் கூடிய நிலையில் மேற்கொள்ளப்படுவதாக அமைய வேண்டும். கட்டுப்பாடு என்ற பெயரில் அரசை விமர்சிக்கும் ஊடகங்களை ஒடுக்குவது இதன் ஊடாக இடம்பெறக்கூடாது.

ஊடக ஒழுங்குமுறைக்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ள ஆவணத்தை வைத்து தேவையில்லாமல் ஊடகங்களை கையாள தற்போதைய அரசாங்கம் சில முயற்சிகளை மேற்கொள்வதாகவே தோன்றுகிறது. இது இந்நாட்டின் ஜனநாயகத்தை கடுமையாக பாதிப்பதாக அமையலாம்.

எனவே ,சுதந்திரமான ஊடகத்துறையின் அபிவிருத்திக்கான நெறிமுறைகளையும் தொழில்முறை ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதையுமே அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

## மலையக...

முதலாவது அரசாங்க ஆவணமாகும். இது தமிழ் முற்போக்கு கூட்டணியின் வெற்றியாகும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் கிருஷ்ணபவான் மண்டபத்தில் இடம்பெற்ற மலையக காணியுரிமை மாநாட்டில் உரையாற்றிய மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது,

உலகில் இடம்பெறும் போராட்டங்களில் பெரும்பாலானவை காணி உரிமை கோரியே இடம்பெறுகின்றன.

காணி உரிமையே சமூகத்துக்கு தேசிய இன அந்தஸ்தை வழங்குகிறது.

வடக்கு கிழக்கில் தேசிய விடுதலைப் போராட்டம் நிகழ்கிறது. அங்கே போர் ஓய்ந்தாலும் இராணுவ பிரசன்னம் ஓயவில்லை. அதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

ஆகவே மலையகத்தில் கவனமாக கோரி பெற வேண்டும். அது தெரிவில் கோஷம் எழுப்புவது போல், சமூக ஊடகங்களில் எழுதுவது போல் சுலபமான காரியம் அல்ல.

இங்கே வாழ, பயிர் செய்ய நிலம் வேண்டும். ஐந்து பேர்ச் என்பதிலிருந்து ஏழு பேர்ச் என்று உயர்த்த பெரும் பாடு பட வேண்டியிருந்தது.

இந்த பின்னணியில், மலையக தமிழர்களின் காணி உரிமை போராட்டத்தின் ஆரம்பப் புள்ளி ஏழு பேர்ச் நிலமாகும்.

## 194 பாடசாலைகள்...

கனகராயன்குளம் மகா வித்தியாலயத்துக்கு மட்டுமான பிரச்சினை இல்லை. வடக்கு, கிழக்கில் பல இடங்களிலும் காணப்படுகின்ற ஒரு பிரச்சினையாகும்.

வடக்கை பொறுத்தவரை சுமார் 194 பாடசாலைகள் மாணவர்கள் இல்லாமையினால் மூடப்பட்டிருக்கின்றன. இதற்கு காரணம் கிராமப்புறங்களில் இருந்து நகரங்களை நோக்கி மாணவர்கள் நகரத் தொடங்கியிருக்கின்றமையும் பிறப்பு வீதம் குறைந்து செல்வதுமேயாகும்.

இதே நிலை மட்டக்களப்பில் 07 வருடங்கள் அரச அதிபராக கடைமையாற்றும் போதும் அவதானித்தேன். இதற்கும் காரணமாக பிறப்பு வீதம் குறைவடைந்து வருகின்றமை மற்றும் முதலாம் தரத்தில் மாணவர்களை அனுமதிப்பதில் சில பாடசாலைகளில் பூச்சிய மட்டத்தில் காணப்படுகின்றதாகவும் பிரதேச செயலாளர்களால் அப்போது சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, இந்த விடயங்கள் புலம்பெயர்ந்த சமூகத்தினாலும் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகத்தினாலும் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். நாங்கள் வாழ வைக்க வேண்டும் என எண்ணுகின்ற எங்களது சமூகம். இந்த பிரதேசம் எதை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும் .இச்சமூகத்தை வாழவைக்கின்ற வழிவகைகளை செய்கின்றவர்களாக நீங்கள் இருக்க வேண்டும்.

இதேவேளை, சில விடயங்களின் புள்ளிவிபரங்கள் இச்சமூகத்திலே அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக இச்சமூகத்திலே விவாகரத்து அதிகரித்தல், குழந்தை பேறு குறைவடைந்தமை, வயது சென்ற திருமணங்கள் அதிகரித்து காணப்படுதல் மற்றும் குடிபோதை, போதைவஸ்து, தற்கொலை போன்ற பல்வேறு சமூகப் பிரச்சினைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனவே, இவற்றை எல்லாம் கடந்து இந்த சமூகம் வாழ வேண்டும் என்றால் புலம்பெயர்ந்த சமூகம் ஆற்ற வேண்டிய பணி நிறைய இருக்கின்றது. அதேபோன்று சிறிய பணிகளோடு மட்டும் நின்று விடாது இச்சமூகத்திலே புரையோடிப்போயிருக்கின்ற பல்வேறு உளநல பிரச்சினைகளுக்கும் தீர்வு தேட வேண்டிய காலம் தற்போது நிலவுகிறது.

வெறுமனே உரிமைப் பிரச்சினையோ அரசியல் பிரச்சினையோ அல்லாமல் எங்களது பிரச்சினைகள் எது என உணர்ந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இளைய சமூகத்திடமும் மாணவர்களிடையேயும், சிறுவர்களிடையேயும் குடும்பங்களிடையேயும் புரையோடிப்போயிருக்கின்ற சமூக உளநல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய தேவையும் அவசரமும் இன்று எங்களிடம் காணப்படுகின்றது.அதற்காக இங்கே கூடியிருக்கின்ற புலம்பெயர் சமூகங்களும் உள்ளூர் சமூகங்களும் இணைந்து செயற்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## ஜனாதிபதித்...

தேர்தலொன்று இடம்பெறுவதானால் இன்னும் ஒருவருடமாவது ஆகும். முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கத்தினரின் நிலைப்பாடாக இருப்பதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடத்தினரை சந்தித்ததன் பின்னர் நேற்றுமுன்தினம் (20) ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

மேலும், சூட்சுமம் செய்யாமல் இலங்கையில் அரசியல் செய்ய முடியாது. ஜே.ஆர். ஜெயவர்தனவின் பேரன் என்பதால் ரணிலுக்கும் சூட்சுமப் பண்புகள் இருந்தே ஆகவேண்டும். அறிந்தவகையில், ஐக்கிய மக்கள் சக்தியில் விரக்தியிலிருக்கும் அநேகமான உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

சப்ரகமுவ மாகாணத்தின் அபிவிருத்தி குறித்து பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் இருக்கிறேன். எனது எதிர்பார்ப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு தனியான குழுவொன்றை கட்டியெழுப்ப முடியுமென நம்புகிறேன்.

மத்திய மாகாணத்தின் மாவட்டமொன்றில் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதே எனது விருப்பம். ஜனாதிபதிக்கும் இதுதொடர்பில் கூறியுள்ளேன். ஆயினும் அதுதொடர்பில் இறுதி முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் இளம் அரசியல் தலைவர்கள் எந்த பக்கத்தில் பலமாக இருக்கிறார்கள் என்பது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றோம். உதாரணமாக ருவன் விஜயவர்தன கம்பஹாவில் போட்டியிடுவதா அல்லது கொழும்பில் போட்டியிடுவதா என்பது குறித்து எந்த இறுதி தீர்மானமும் எடுக்கவில்லை. எனவே எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் மத்திய மாகாணத்திலுள்ள மாவட்டமொன்றில் போட்டியிடுவதா அல்லது சப்ரகமுவ மாகாணத்தில் போட்டியிடுவதா என்பது தொடர்பில் இறுதித் தீர்மானமொன்றை எடுக்க நேரிடும். ஆனால், இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக விருப்பம் எனக்கு இல்லை. 20 வருடங்களுக்கு மேலாக நுவரெலியா மாவட்டத்தில் பணியாற்றியுள்ளேன். அந்த மக்களுக்கு சேவையையும் வழங்கியுள்ளேன். என்மீது இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்கள் இல்லை. நுவரெலியா மாவட்டத்தில் நான் செய்த பணிகளை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக கடமையாற்றி நானும் சோர்வடைந்தே இருக்கிறேன்.

எந்நேரமும் தமிழ் தலைவர்களுடன் மோதுவதற்கு எனக்கு விருப்பமில்லை. குறிப்பாக ஜீவன் தொண்டமான் போன்றோர் எனது சிறந்த நண்பர்களாக இருக்கிறார்கள். இருந்தபோதும், ஜீவனின் தந்தையுடன் தொடர்ச்சியாக மோதினேன். எனவே, மாத்தளை அல்லது கண்டி போன்ற பிரதேசங்களில் போட்டியிடுவது தொடர்பில் கலந்துரையாடி ஒரு தீர்மானத்துக்கு வர எதிர்பார்த்துள்ளேன். அதற்காக யாரும் தேர்தலுக்குத் தயாராகவில்லை. எவ்வாறாயினும் தேர்தலொன்று இடம்பெறுவதற்கு இன்னும் ஒரு வருடமாவது செல்லும். ஜனாதிபதித்தேர்தலோ அல்லது பொதுத் தேர்தலோ எந்தவொரு தேர்தலும் இப்போது இடம்பெறாது. தேர்தலுக்கு யாரும் தயாராகவும் இல்லை. மக்களும் இப்போது சோர்வடைந்தே இருக்கிறார்கள். உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்பது மக்களின் தேவையுமில்லை. அதற்கு முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும். 2014 ஆம் ஆண்டிலிருந்து மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. அவ்வாறு தேர்தலொன்று நடத்த வேண்டுமென்றால் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்தவுடன் தேர்தலை நடத்த முடியும்.

ஆனால், ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் எதிர்பார்ப்பிலேயே இருக்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கும் நிலைப்பாட்டிலேயே, ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பகுதியினரும் பொதுஜன பெரமுனவில் அநேகமானவர்களும் சிறுபான்மைக் கட்சிகளின் ஒரு பகுதியினரும் இருக்கிறார்கள். அநுரகுமார திஸாநாயக்க, சஜித் உள்ளிட்டோர் தாம் பொது வேட்பாளர்கள் என்றே அறிவித்திருக்கிறார்கள். இந்த மும்முனைப்போட்டியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. ரணில் ஜே.ஆர்.ஜெயவர்தனவின் பேரன் என்பதால் அவரிடமும் சூட்சுமம் செய்யும் தன்மை இருக்கவேண்டும். சூட்சுமம் செய்யாமல் இந்த நாட்டில் அரசியல் செய்ய முடியாது. பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரின் பின்னால் இருக்கிறார்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் அநேகமானவர்கள் விரக்தியிலேயே இருக்கிறார்கள்.

ஆகவே, அந்தக் கட்சியைச் சேர்ந்த அநேகமானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொள்வார்கள் என்றார்.

# கண்டியில் சர்வதேச யோகா தின நிகழ்வுகள்





இக்பால் அலி

கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயம் நடத்திய சர்வதேச யோகா தின நிகழ்வு கண்டி சேஸ் உயன மண்டபத்தில் உயர் உயர்ஸ்தானிகர் கலாநிதி எஸ். ஆதிரா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே கலந்துகொண்டார்.

அத்துடன் மாவட்ட செயலாளர் சந்தன தென்னக்கோன், கண்டி உதவி இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் இரண்டாம் செயலாளர் பி.சோமராஜ், கண்டி மாநகர ஆணையாளர், பிரதான பொலிஸ் அதிகாரிகள், காவல் துறையினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் ஜனநாயகத்தை புதைக்கும் செயற்பாடாகும்

## அரசியல் சமூக செயற்பாட்டாளர் அருந்தவபாலன்

சாவகச்சேரி நிருபர்

ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் சட்ட ஏற்பாடானது ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைக்கும் செயற்பாடாகவே எம்மால் பார்க்க முடிகின்றது என அரசியல் சமூக செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் நேற்று (21)இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகங்களை ஒழுங்குபடுத்துகின்ற சட்டங்கள் இன்னும் முழுமையாக வெளிவராதபோதிலும் அந்தச் சட்டங்கள் தொடர்பாக பல்வேறு கருத்துகள் மக்கள் மத்தியிலும் ஊடகங்கள் மத்தியிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை மிக அவதானமாக கையாள வேண்டும். ஏனெனில் இலங்கை போன்ற நாடுகளில் நிர்வாகம் மற்றும் நீதித்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பதால் மக்களின் ஜனநாயக உரிமையை பாதுகாப்பதிலும் ஆளுபவர்களுடைய அதிகார துஷ்பிரயோகங்களை வெளிக்கொண்டு வருவதிலும் ஊடகங்கள் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன.

அந்தவகையில் ஊடகங்களை ஒழுங்குபடுத்துகின்ற சட்டங்கள், ஆட்சியாளர்கள் தமக்குத் தேவையான வகையில் செயற்படுவதற்கான அனுமதியை வழங்குவதாக இருக்கக்கூடாது என்பதில் சகலரும் விழிப்பாக இருக்க வேண்டும்.



இலங்கையில் உருவாக்கப்படுகின்ற பெரும்பாலான சட்டங்கள் ஆட்சியில் உள்ளவர்களுக்காகவே உருவாக்கப்படுவதை கடந்த கால வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன. அந்தவகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு ஏற்ற வகையில் எதிர்காலத்தில் உருவாகக் கூடிய மக்களின் எதிர்ப்புகளை அடக்குகின்ற நடவடிக்கைக்கு ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் சட்டங்களை கொண்டு சென்று விடுவாரோ என்ற ஐயம் எம் மத்தியில் உள்ளது.

மேற்குறித்த சட்டங்கள் பற்றி மக்களுக்கு தெளிவான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

அதற்கு மேலாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் இந்த சட்டம் தொடர்பாக மிகத்தெளிவாக இருக்க வேண்டியது அவசியம்.

இந்த ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டத்தில் ஊடகங்களுக்கான அனுமதிப் பத்திர முறைமை கொண்டு வரப்பட்டு ஊடக அனுமதியை இரத்துச் செய்கின்ற ஓர் உறுப்பும் இருப்பதாக சொல்லப்படுகின்றது. இது முழுக்க முழுக்க ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைக்கும் செயற்பாடு.

அதாவது ஆட்சியாளர்கள் தமக்கு எதிராக இருக்கக்கூடிய மற்றும் மக்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய ஊடகங்களை இல்லாமல் ஒழிக்கும் அல்லது அடக்குகின்ற சட்டமாகவே இது பார்க்கப்படுகிறது.

இந்த சட்டம் ஊடாக ஊடகங்களின் வாயை அடைக்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானால் நிச்சயமாக எதிர்காலத்தில் இலங்கையின் ஜனநாயகம் மற்றும் மக்களின் உரிமைகள் மிகவும் பாதிக்கப்படும்.

எனவே ஊடகங்களை அடக்குகின்ற, ஊடகங்களை ஊடக பரப்பில் இருந்து அகற்றுகின்ற சட்டங்களை எவரும் அனுமதிக்கக் கூடாது எனவும் கூறினார்.

## சுற்றுலா, விருந்தோம்பல் முகாமைத்துவ கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படவுள்ள சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஒரு வருட கால கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 28ஆம் திகதியாகும்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்த அல்லது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து ஒரு வருடகால துறைசார் அனுபவமுடையவர்கள் இக்கற்றை நெறிக்காக விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பிக்க விரும்புபவர்கள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என கற்கை நெறியின் இணைப்பாளர் பேராசிரியர் சி.சிவேசன் அறிவித்துள்ளார்.

# வாகன விபத்து ஒருவர் படுகாயம்

## சங்குவாரி பிரதேசத்தில் சம்பவம்

கலஹா செய்தியாளர்

கம்பளையிலிருந்து புசல்லாவை நோக்கிச் சென்ற கெப் ரக வாகனம் இரட்டைப்பாதை சங்குவாரி பிரதேசத்தில் மண் திட்டில் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயங்களுக்குள்ளாகி புசல்லாவ, வவ்கப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புசல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் (20) இரவு 7. 30 மணியளவில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புசல்லாவை பிரதேசத்தைச் சேர்ந்த மூவர் மருத்துவ சிகிச்சைக்காக கம்பளை நகருக்கு சென்று மீண்டும் புசல்லாவை நோக்கிச்சென்றபோதே மேற்படி விபத்து நேர்ந்துள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# காலி மாவட்டத்தில் 200 ஸ்மார்ட் வகுப்பறைகள்

## ஸ்தாபிப்பதை துரிதப்படுத்துவதற்கான இராஜதந்திர ஆவணங்கள் பரிமாற்றம்





காலி மாவட்டத்தில் 200 பாடசாலைகளில் நவீன கணினி கூடங்கள் மற்றும் ஸ்மார்ட் திரைகளை நிறுவும் பணிகளை துரிதப்படுத்துவதற்கான இராஜதந்திர ஆவணங்கள் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் கல்வியமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்கே ஆகியோருக்கிடையில் 19ஆம் திகதி பரிமாறப்பட்டன.

இந்நிகழ்வில் பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண, பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் கே.ஜேக்கப், இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் மற்றும் கல்வியமைச்சின் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த இராஜதந்திர ஆவணங்களின் பரிமாற்றமானது இலங்கை அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட கட்டமைப்புக்கிணங்க கொள்முதல் நடவடிக்கைகளை மறுசீரமைப்பதன் மூலம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை நெறிப்படுத்தி துரிதப்படுத்துகிறது. இந்திய அரசின் நன்கொடை உதவியின் மூலம் அமுல்படுத்தப்படும் இந்த திட்டம், குறைந்த வசதிவாய்ப்புகள் உள்ள பாடசாலைகளில் கற்கும் மாணவர்களிடையே டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இலங்கையின் கல்வித் துறையில் இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நன்கொடை அடிப்படையிலான திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

இலங்கைக்காக இந்தியாவால் வழங்கப்பட்ட ஒட்டுமொத்த அபிவிருத்தி உதவியானது 05 பில்லியன் அமெரிக்க டொலரை எட்டியுள்ள அதேநேரம், 600 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள 25 மாவட்டங்களிலும் நன்கொடை அடிப்படையில் கிட்டத்தட்ட 65 அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் தற்போது இருபதுக்கும் அதிகமான திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் அவை பல்வேறு நிலைகளில் உள்ளன. குறிப்பாக இந்திய வீடமைப்புத் திட்டம் மற்றும் 1990 சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவை ஆகியவை இலங்கையில் இந்தியாவால் முன்னெடுக்கப்படும் நன்கொடை திட்டங்களில் முதன்மையானவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலய நூற்றாண்டு விழா

## வடமாகாண ஆளுநர் பிரதம அதிதி











வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நேற்று (21) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொண்டு புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலையின் பிரதான நுழைவாயலை திறந்து வைத்ததுடன், திருவள்ளுவர், பண்டாரவன்னியன் மற்றும் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியான அமரர் கலாநிதி அப்துல்கலாம் ஆகியோரின் சிலைகளும் கௌரவ விருந்தினர்களான வவுனியா வடக்கு வலயக்கல்வி பணிப்பாளர் லெனின் அறிவழகன், பாடசாலையின் பழைய மாணவர் த.இராசரத்தினம் ஆகியோருடன் இணைந்து திறந்து வைத்தார்.

இதன்போது பொதுப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மற்றும் விளையாட்டுத்துறைகளில் சாதனை படைத்தவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் கோ.குலேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 07ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்**: வீடு மற்றும் வாகனம் இவற்றால் இலாபங்களை அடைவீர்கள். தாய்வழி உறவுகளின் உதவிகளால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**ரிஷபம்**: எதிர்பாராத வகையில் நண்பர் ஒருவரின் உதவி கிடைக்கும். மனத்துணிவுடன் காரியம் சாதிப்பீர்கள்.

**மிதுனம்**: பணக் கொடுக்கல் வாங்களில் இருந்து வந்த பிரச்சினை தீரும். குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக எல்லை மீறி செலவு செய்வீர்கள்.

**கடகம்**: உங்கள் புகழ், செல்வாக்கு உச்சத்தை தொடப் போகின்றது. தடைப்பட்டிருந்த சுப காரியங்கள் இனிதே நடந்தேறும்.

**சிம்மம்**: தொழில் நிமித்தம் அலைச்சலும் உடல் அசதியும் உண்டு. வெளிநாட்டு நன்மைகள், இலாபங்கள் உண்டு.

**கன்னி**: எதிர்பாராத தன அதிர்ஷ்டம் உண்டு. தொழில் வியாபாரத்தில் நீங்கள் தான் இன்றைய சாதனையாளர்.

**துலாம்**: நீங்கள் நீண்ட நாள் திட்டமிட்ட காரியம் இன்று பலனளிக்கப் போகின்றது. தொழிலில் ஈடேற்றம் உண்டு.

**விருச்சிகம்**: நீண்ட நாள் உங்கள் கனவினை இன்று நனவாக்குவீர்கள். ஆன்மீக சிந்தனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**தனுசு**: கவனக் குறையுடன் செயலாற்றினால் குறை கேட்க நேரிடும். மனதில் தேவையற்ற எண்ணங்கள் அலைமோதும்.

**மகரம்**: நீங்கள் விரும்பியவரை மணக்க பெற்றோர் சம்மதம் தெரிவிப்பர். கூட்டு முயற்சிகளில் அதிக இலாபங்களைப் பெறுவீர்கள்.

**கும்பம்**: பழைய கடனை அடைப்பதற்கு புதுக் கடன் தொகை பெறுவீர்கள். சிரித்துச் சிரித்து கழுத்தறுக்கும் நபர்களிடம் எச்சரிக்கை வேண்டும்.

**மீனம்**: தொழில் ரீதியில் இருந்து வந்த சிக்கலகள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். புதிய புதிய திட்டங்களால் வெற்றியடைவீர்கள்.

| | |
|---|---|
| **திதி** | : சதுர்த்தி பி.ப.5.28 வரை பின் பஞ்சமி (வளர்) |
| **நட்சத்திரம்** | : ஆயிலியம் பி.இ.4.18 வரை பின் மகம் |
| **யோகம்** | : சித்தாமிர்தம் யோகம் |
| **வார சூலை** | : தெற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது |
| **நல்லநேரம்** | : மு.ப.10.52 - 11.52 மணிவரை |
| **ராகுகாலம்** | :1.22 - 2.52 மணிவரை |
| **எமகண்டம்** | : 5.52- 7.22 மணிவரை |
| **குளிகை** | : 8.52- 10.22 மணிவரை |
| **சந்திராஷ்டமம்** | :தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும். |
| **தனஅதிர்ஷ்டம்** | :பூசம், அனுஷம், உத்தரட்டாதி (பிறந்தவர்களுக்கு) |
| **விசேட தினம்** | :சதுர்த்தி விரதம் |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (21.06.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.2989 | 215.0056 |
| கனேடியன் டொலர் | 224.4728 | 239.4298 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40.8149 | 44.2691 |
| யூரோ | 324.4547 | 344.5365 |
| ஜப்பான் யென் | 2.1010 | 2.2276 |
| சிங்கப்பூர் டொலர் | 220.8614 | 235.1173 |
| ஸ்ரேலிங் பவுன் | 379.6933 | 402.2360 |
| சுவிஸ் பிராங் | 329.5186 | 352.4145 |
| ஐ.அ. டொலர் | 298.4708 | 314.4947 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 811.9919 |
| குவைட் | குவைட் தினார் | 996.7602 |
| ஓமான் | ஓமான் றியால் | 795.1609 |
| கட்டார் | கட்டார் றியால் | 84.0402 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 81.6159 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 83.3469 |

# நுவரெலியா தபால் நிலையக்கட்டடத்தை விற்பதற்கு எதிராக போராட்டம்







செ.திவாகரன் நானுஓயா

நுவரெலியாவின் அடையாளச் சின்னமாக கடந்த 130 வருடங்களுக்கு மேலாக திகழும் நுவரெலியா தபால் நிலையக் கட்டடத்தை விற்பனை செய்வதற்கு எதிராக நேற்று புதன்கிழமை (21) எதிர்ப்பு ஆர்ப்பாட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியாவில் விலைமதிப்பற்ற வளமாக கருதப்படும் நுவரெலியா தபால் நிலையக்கட்டடம் இலங்கையின் முதன்மை சுற்றுலா ஊக்குவிப்பு நிறுவனமான 'ஜெட்வின்' நிறுவனத்திடம் ஒப்படைக்க யோசனைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

சுமார் ஆறு வருடங்களுக்கு முன்னரும் இவ்வாறு தெரிவித்தபோது தபால் நிலைய ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மீண்டும் இக்கட்டடத்தை கைப்பற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நுவரெலியா பிரதான தபால் நிலையத்தை சுற்றி கறுப்பு கொடிகள் கட்டி தபால் நிலையத்துக்கு முன்பாக தபால் ஊழியர்களும் பொது மக்களும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் கைகளில் பதாகைகளை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பினர். இதன்போது தபால் நிலையத்துக்கு சேவைகள் பெற வந்தவர்களிடம் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டதுடன் கையெழுத்தும் சேகரிக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் இலங்கை தபால் அதிகாரி சங்கம், இலங்கை தபால் ஊழியர்கள் சங்கம், அகில இலங்கை தபால் தந்தி ஊழியர்கள் சங்கம் மற்றும் தபால் மற்றும் தொலைத்தொடர்பு சங்கம் என்பன இணைந்து கொண்டன.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூன் 22ஆம் திகதி, வியாழக்கிழமை

# டைட்டானிக் பயணமும் மீட்புப் பணிகளும்!

அட்லாண்டிக் பெருங்கடலில் மூழ்கியுள்ள டைட்டானிக் கப்பலை பார்க்கும் ஆழ்கடல் சுற்றுலாவின் ஒரு பகுதியாக 05 பேருடன் சென்ற நீர்மூழ்கிக் கப்பல் காணாமல்போய் 04 நாட்கள் கடந்துவிட்டன. அது காணாமல்போன பகுதியில் நீருக்கடியில் இருந்து சத்தம் எழுந்ததை கனேடிய கடற்படைக்குச் சொந்தமான பி-3 விமானம் கேட்டதாக அமெரிக்க கடலோர காவல்படை உறுதிப்படுத்தியுள்ளது.

அமெரிக்க அரசின் ஆவணங்களைச் சுட்டிக்காட்டி, அது மோதும் சத்தமாக இருக்கலாம் என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அந்தச் சத்தம் எப்போது, எவ்வளவு நேரத்துக்கு கேட்டது என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என்று சி.என்.என். தொலைக்காட்சிச் செய்தி கூறுகிறது.

நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டுபிடிக்க அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் கடற்படைகளுடன் ஆழ்கடலை ஆய்வுசெய்யும் தனியார் நிறுவனங்களும் இணைந்து தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்தியுள்ளன.

அட்லாண்டிக் பெருங்கடலில் 19,650 சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்கு தேடுதல் வேட்டை நடைபெறுகிறது.

காணாமல்போன நீர்மூழ்கியில் உள்ள 05 பேரும் இன்னும் 30 மணி நேரத்துக்கு சுவாசிப்பதற்கான ஒட்சிசன் மட்டுமே எஞ்சியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தாமதமாகும் ஒவ்வொரு நிமிடமும் அவர்கள் உயிருடன் இருப்பதற்கான வாய்ப்புகளைக் குறைத்துவிடும் என்பதால் விரைந்து அவர்களைக் கண்டுபிடிக்க தேடுதல் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. பிரிட்டனைச் சேர்ந்த ஆழ்கடல் ஆய்வு நிறுவனமான மெகல்லனின் உதவியையும் ஓஷன்கேட் நிறுவனம் கேட்டுள்ளது.

தேடுதல் பணி மிகவும் சிக்கலாக இருந்தாலும், நீர்மூழ்கி எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்ததுமே அதனை மீட்டு வெளியே கொண்டுவரத் தேவையான அனைத்தையும் செய்ய நிபுணர்கள் தயாராக இருப்பதாக அமெரிக்க கடலோர காவல்படை தெரிவித்துள்ளது. காணாமல்போன நீர்மூழ்கியை கப்பல்கள், விமானங்கள்மூலம் கண்டுபிடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஹொலிவூட் சினிமா வடிவில் உலகம் முழுவதும் கிட்டத்தட்ட அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகிவிட்ட டைட்டானிக் கப்பல் நியூ ஃபவுண்ட்லாந்தின் சென் ஜோன்ஸ் நகருக்குத் தெற்கே சுமார் 700 கி.மீ. தொலைவில் அட்லாண்டிக் பெருங்கடலில் மூழ்கிக் கிடக்கிறது. நூறாண்டுகளுக்கும் மேலாக ஆழ்கடலில் ஆழ்ந்த துயில் கொண்டிருக்கும் டைட்டானிக் கப்பலை நேரில் பார்ப்பதற்கென தனியாக சுற்றுலாவே நடத்தப்படுகிறது. அத்தகைய நிறுவனங்களில் ஒன்று ஓஷன்கேட் (Oceangate).

தற்போது ஆழ்கடலில் காணாமல்போன சிறிய சுற்றுலா நீர்மூழ்கிக் கப்பல் அந்த நிறுவனத்துக்குச் சொந்தமான டைட்டன் என்ற நீர்மூழ்கி என்று கூறப்படுகிறது. ஒரு லொறி அளவிலான இந்த நீர்மூழ்கியில் 05 பேர் வரை பயணிக்க முடியும். அதில் வழக்கமாக 04 நாட்களுக்குத் தேவையான ஒட்சிசன் இருப்பு வைக்கப்பட்டிருக்கும்.

ஆழ்கடலில் 12,500 அடி ஆழத்தில் மூழ்கியுள்ள டைட்டானிக் கப்பலை நேரில் பார்க்கும் இந்த சுற்றுலா 08 நாட்கள் கொண்டது. அதற்கு கட்டணமாக ஒருவருக்கு இலங்கை மதிப்பில் 05 கோடி ரூபா வசூலிக்கப்படுகிறது. அந்த நீர்மூழ்கியில் வழக்கமாக பைலட் ஒருவர், 03 சுற்றுலாப் பயணிகள், சுற்றுலா வழிகாட்டி ஆகிய 05 பேர் பயணிப்பார்கள். விபரீதத்தில் முடிந்த இந்தப் பயணம், நியூ பவுண்ட்லாந்து கடற்கரையில் சென் ஜோன்ஸ் நகரில் தொடங்கியுள்ளது.

பயணத்தைத் தொடங்கிய ஒரு மணி நேரம் 45 நிமிடங்களில் அந்த நீர்மூழ்கியுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டதாக அமெரிக்க கடலோர காவல்படை தெரிவித்துள்ளது. நீர்மூழ்கியில் உள்ள 05 பேரையும் பத்திரமாக மீட்க அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி வருவதாக சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்த ஓஷன்கேட் நிறுவனம் கூறியுள்ளது.

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் கடற்படைகளுடன் ஆழ்கடல் ஆய்வு நிறுவனங்கள் பலவும் இந்த மீட்புப் பணியில் கைகோர்த்துள்ளன. 02 விமானங்கள், ஒரு நீர்மூழ்கி மற்றும் சோனார் மிதவைகளைக் கொண்டு நீர்மூழ்கியைத் தேடும் பணிகள் நடைபெறுவதாகவும் நீர்மூழ்கி காணாமல்போன இடம் தொலைதூரப்பகுதி என்பதால் தேடுதல் பணி கடினமாக இருப்பதாகவும் செய்திகள் சொல்கின்றன.

மீட்புக் குழுவினர் இந்தப் பணியை தனிப்பட்ட சவாலாக எடுத்துக் கொண்டு நீர்மூழ்கியில் உள்ள 05 பேரையும் உயிருடன் மீட்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆழ்கடலில் காணாமல்போன நீர்மூழ்கியில் பிரிட்டனைச் சேர்ந்த 58 வயது கோடீஸ்வரரான ஹாமிஷ் ஹார்டிங் என்பவரும் இருந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். ஓஷன்கேட் நிறுவனம் தன்னிடம் 03 நீர்மூழ்கிகள் இருப்பதாக இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளது. அவற்றில் டைட்டன் நீர்மூழ்கி மட்டுமே டைட்டானிக் மூழ்கியுள்ள ஆழத்துக்குச் செல்லக்கூடியது.

10,432 கிலோகிராம் எடை கொண்ட அந்த நீர்மூழ்கியால் 13,100 அடியாழம் வரை செல்ல முடியும். அதில் 05 பேருக்கு 96 மணி நேரத்துக்குத் தேவையான ஒட்சிசன் இருப்பு வைக்கப்பட்டிருக்கும் என்று அந்த இணையதளத்தில் கூறப்பட்டுள்ளது. ஆழ்கடலில் டைட்டானிக் மூழ்கியுள்ள இடத்துக்குச் சென்று திரும்பிவர 08 மணி நேரம் ஆகும் என்று கூறப்படுகிறது.

டைட்டானிக் கப்பல் அது கட்டப்பட்ட காலத்தில் இருந்த உலகின் மிகப்பெரிய கப்பல் என்ற பெருமையைப் பெற்றது. 1912ஆம் ஆண்டு பிரிட்டனின் சவுதாம்ப்டன் நகரிலிருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு மேற்கொண்ட கன்னிப் பயணத்தின்போதே அட்லாண்டிக் பெருங்கடலில் பனிப்பாறையில் மோதி மூழ்கியது. பயணிகள், பணியாளர்கள் என அதிலிருந்த 2,200 பேரில் 1,500க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துவிட்டனர்.

1985ஆம் ஆண்டு அதன் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு டைட்டானிக் மீதான ஆர்வம் அதிகரித்தது.

ஆழ்கடலில் டைட்டானிக் கப்பலின் சிதைவுகள் இரு பாகங்களாக 2,600 அடி இடைவெளியில் கிடக்கின்றன. கடந்த மாதத்தில் ஆழ்கடல் வரைபடக் கலை மூலம் டைட்டானிக் சிதைவுகளின் முழுமையான டிஜிட்டல் வடிவம் உருவாக்கப்பட்டது.

இந்த மீட்புப்பணிகள் தொடர்பில் முழு உலகத்தின் பார்வை திரும்பியுள்ளது. என்னதான் நவீன தொழில்நுட்பங்களாலும் விஞ்ஞானத்தின் வளர்ச்சியாலும் உலகம் மேம்பட்டிருந்தாலும் இயற்கையின் சீற்றத்தை அல்லது மோதலை எதிர்கொள்ளும் ஆற்றல் முழுமையாக மனித குலத்துக்கு கிடைத்துவிடவில்லை. அப்படியே கிடைத்தாலும் அதுவும் இயற்கையின் சீற்றத்துக்கு ஆளாகும் முன்னேற்பாடுகளையே செய்யும் பேரழிவுகளுக்கே வழிவகுக்கும்.

டைட்டானிக் கப்பலை காணப் புறப்பட்ட நீர்மூழ்கி கண்டுபிடிக்கப்பட்டு அதில் இருப்பவர்களின் உயிர் காப்பாற்றப்படவேண்டும் என்பதை உலகம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. புதுயுக விஞ்ஞானிகளுக்கும் இது சவால். ஐம்பூதங்களில் ஒன்றான கடல்மாதா கையில்தான் இறுதி முடிவு தங்கியுள்ளது.

# மக்களின் தேவைகளையும் அபிலாஷைகளையும் நிறைவேற்ற அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டும்!

நாட்டில் நிலைவரம் மேம்பட்டு வருவதன் அறிகுறியாக தற்போதைய உறுதிப்பாட்டு நிலையைக் கருதமுடியும். சட்டம்- ஒழுங்கு நிலைவரத்தில் காணப்படக்கூடியதாக இருக்கும் முன்னேற்றம், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்பாக நீண்ட வரிசைகளில் மக்கள் இரவுபகலாக காத்துக்கொண்டிருந்ததைப் போன்ற வெளியில் தெரியக்கூடிய பொருட்கள் தட்டுப்பாடு இல்லாத நிலை, பணவீக்கத்தின் வீழ்ச்சி ஆகியவை ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்த நிலைவரத்துடன் ஒப்பிடும்போது பெரிய மாற்றத்தைக் குறித்து நிற்கின்றன.

ஆனால், தட்டுப்பாடுகள் தொடருகின்றன.உடல் வறட்சியைத் தடுப்பதற்கு அவசியமான ஜீவனிக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது.டெங்கு போன்ற நோய்களுக்கு சிகிச்சை பெறுபவர்கள் மற்றும் விளையாட்டுகளில் ஈடுபடுபவர்களுக்கு ஜீவனி அவசியமானதாகும். அதை உள்ளூரில் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதில் உள்ள பிரச்சினைகளே தட்டுப்பாட்டுக்கு காரணம் என்று கூறப்படுகிறது. ஜீவனிக்கு மாற்றாக பயன்படுத்தக்கூடிய ஔடதங்கள் இருக்கின்ற போதிலும் அவற்றின் விலை இரண்டு மடங்காக உள்ளது. தங்களது வருமானத்திற்குள் வாழ்க்கையை சமாளிக்கக்கூடியவர்களாக இருக்கும் மக்கள் பிரிவினர் மேலோட்டமாக நிலைவரங்களை நோக்கி, நாட்டில் வழமைநிலையை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் கண்டிருக்கும் வெற்றியை பொதுவில் பாராட்டுகிறார்கள்.

தற்போதைய உறுதிப்பாட்டு நிலை நாட்டின் பொருளாதார மீட்சிக்கான அடிப்படையாக அமையமுடியும். ஊழலைக் கட்டுப்படுத்தி, பொறுப்புக்கூறலை மேம்படுத்தி, நிலைபேறான கொள்கைகளின் மூலமாக முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உறுதிசெய்வது அவசியமாகிறது. முதலீடுகளின் மூலமாக தாங்கள் அடையக்கூடிய பயன்களை பாதிக்கும் வகையிலான கொள்கை மாற்றங்கள் குறித்து முதலீட்டாளர்களுக்கு இருக்கும் அச்சம் இலங்கையில் சர்வதேச முதலீடுகள் தாழ்ந்த நிலையில் உள்ளதற்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

மேற்கூறப்பட்ட காரணிகள் இல்லாத நிலைமையிலும் கூட பொருளாதாரம் சீரடைந்து வருகிறது என்று அரசாங்கம் உரிமை கோருவதற்கு முரணாக இரு யதார்த்த காரணிகள் அமைகின்றன. முதலாவது காரணி, சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் தரவுகள். இந்த வருடத்தின் முதற் காலாண்டில் நிகர உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை 11.5 சதவீதமாக திணைக்களம் மதிப்பிட்டிருக்கிறது.இது எதிர்மறையான வளர்ச்சியாகும்.கடந்த வருடத்தைய பொருளாதார வீழ்ச்சி 9.2 சதவீதமாக இருந்தது.

பொருளாதார நிலைவரம் பற்றிய தோற்றப்பாட்டை தடுமாற்றத்துக்கு உள்ளாக்கும் இரண்டாவது புள்ளிவிபரம் இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியாகும். கடந்த சில வாரங்களாக ஏற்பட்டுவந்த நாணயத்தின் பெறுமதி அதிகரிப்பு பொருளாதாரம் வலுவடைந்துவருவதன் சான்றாக நோக்கப்பட்டது. ஆனால், மீண்டும் நாணயப் பெறுமதி வீழ்ச்சியடைவதை காணக்கூடியதாக இருக்கிறது.

பொருளாதாரத்தைக் கையாளுவதில் அரசாங்கம் வெளிக்காட்டும் ஆற்றல் தொடக்கம் வெளிநாடுகளில் வேலைசெய்யும் இலங்கையர்களின் அனுப்பீடுகள் அதிகரிப்பு மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு வரை பொருளாதாரம் வலுவடைந்து வருவதற்கான பல்வேறு காரணங்கள் என்று கூறப்படுகின்றன.

இறக்குமதிகள் மீதான இறுக்கமான கட்டுப்பாடுகள், சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலுடனான கடன் மறுசீரமைப்பு செயன்முறைகள் பூர்த்தியடையும் வரை வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்தாமல் இருக்கக்கூடியதாக இருக்கின்றமை போன்ற காரணிகளின் பின்புலத்திலேயே இலங்கை நாணயத்தின் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படுகிறது என்ற உண்மை மூடிமறைக்கப்படுகிறது.

**மனித அவலம்**

பொருளாதார வசதிகள் உள்ளவர்களும் நாணய பரிமாற்ற விவகாரங்களில் உண்மையில் என்ன நடக்கிறது என்பதை உயர்மட்ட தொடர்புகளின் மூலமாக அறிந்துகொள்ளக்கூடியவர்களும் குறைந்த ஒரு விலைக்கு அமெரிக்க டொலர்களை வாங்கி கூடுதல் விலைக்கு விற்று பெரும் இலாபம் அடையக்கூடியதாக இருக்கிறது. சமூகத்தின் அடிநிலையில் உள்ளவர்கள் கண்ணியமான வாழ்க்கையை நடத்துவதற்கு பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். தங்களது சொற்ப உடமைகளை விற்பனை செய்யாமல் அல்லது மேலும் கடன் பெறாமல் அவர்களால் வாழ்க்கையை நடத்தமுடியவில்லை.

25 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளதாக தற்போது மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நிலை அடுத்த சில வருடங்களுக்கு தொடரும் என்று கூறப்படுகிறது. இரு வருடங்களுக்கு முன்னர் வறுமைக்கோட்டுக்கு கீழ் 13 சதவீதமான குடும்பங்களே இருந்தன.

எனது இரு அனுபவங்கள் மனித அவலங்களைத் தெளிவாக வெளிக்காட்டுகின்றன. நான் பணியாற்றும் காரியாலயத்தின் பாதுகாப்புப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட பாதுகாப்புக் கம்பனியின் ஊழியர் பற்றியது முதலாவது அனுபவம். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட அவர் மூன்று வாரங்களாக கடமைக்கு வரமுடியாதவராக இருக்கிறார்.

கொழும்பில் இருந்து 27 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வீட்டுக்கு அவரைப் பார்க்க நான் சென்றபோது ஒரு தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் அவர் அமர்ந்திருந்தார். அந்தப் பெட்டியிலிருந்து ஒலி வந்தது. ஆனால், படங்கள் வரவில்லை.

தொலைக்காட்சிப் பெட்டி தான் நோயில் வீழ்வதற்கு முன்னர் அதாவது, ஒரு மாதத்துக்கு முன்னரே பழுதாகிவிட்டது என்று அவர் சொன்னார். திருத்தியெடுக்க சுமார் 2,000 ரூபா செலவாகும் என்று நினைத்து அதை அருகிலுள்ள நகருக்கு கொண்டு சென்றபோது அதற்கு 7,000 ரூபா செலவாகும் என்று அங்குள்ளவர்கள் கூறியதாகவும் அதனால் அதைத் திருத்தாமலேயே வீட்டுக்கு கொண்டுவந்து விடடதாகவும் என்னிடம் அவர் கூறினார்.

தொலைக்காட்சிப் பெட்டிக்கருகே மேசையில் செலுத்தப்படாத மின்கட்டணப்பட்டியல் சிவப்பு அறிவித்தலுடன் காணப்பட்டது. கடமைக்கு வருவதில்லை என்பதால் அவரால் தனது சம்பளத்தைப் பெறமுடியாது. வேலை செய்யும் மணித்தியாலங்களின் பிரகாரமே அவருக்கு சம்பளம் வழங்கப்பட்டுவந்தது.

அவரது மனைவி அருகாமையில் உள்ள பிளாஸ்ரிக் தொழிற்சாலையில் வேலை செய்கிறார். போதிய ஆடர்கள் கிடைக்கும்போது கிராமத்தவர்களுக்கு அந்த தொழிற்சாலை தினமொன்றுக்கு 800 ரூபா சம்பளத்துடன் வேலை வழங்குகிறது. ஆனால், நோய்வாய்ப்பட்ட கணவரைப் பராமரிக்க வேண்டுமென்பதால் மூன்று வாரங்களாக மனைவி வேலைக்குச் செல்லவில்லை. அவர்களின் இரு பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்கிறார்கள். நான் அங்கு இருந்தபோது மகள் ரியூஷன் வகுப்பிலிருந்து இரு நண்பிகளுடன் வந்தார்.அடுத்த ரியூஷன் வகுப்புக்குப் போவதற்கு முன்னதாக நண்பிகளுடன் மதிய உணவை பகிர்ந்துகொள்ளலாம் என்று எதிர்பார்த்தார்.எல்லாப் பிள்ளைகளும் எதிர்பார்ப்பதைப் போன்று தேவையான உணவை பெற்றோர் தயார் செய்துவைத்திருப்பார்கள் என்று அந்தப் பிள்ளையும் நம்பியது.

எனது இரண்டாவது அனுபவம் அபான்ஸ் வீதி சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவருடனானது. தனது மனைவிக்கு மருந்து வாங்குவதற்கு பணம் கேட்டு என்னிடம் அவர் வந்தார். புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த மனைவிக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

ஆனால், அவரது குடலில் இன்னொரு சத்திரசிகிச்சை செய்யவேண்டியேற்பட்டது. உடனடி மருந்துக்காக அவருக்கு 3,000 தேவைப்பட்டது. இரு சிகிச்சைகளையுமே இலவசமாக அரசாங்க வைத்தியசாலையில் செய்யக்கூடியதாக இருந்தமை அவரது அதிர்ஷ்டம்.

ஒரு காலத்தில் மிகவும் மெச்சத்தக்கதாக இருந்த இலங்கையின் சமூக நலன்புரித் திட்டங்களின் மரபுரிமையாக வந்ததே இந்த இலவச சுகாதார சேவை. அரசியல் தலைவர்களின் மோசடித்தனமான போக்குகளினால் பாதிக்கப்படுவதற்கு முன்னர் அந்த சேவை சிறப்பானதாக இருந்து வந்தது. புராதன மத மரபுச்சொத்துகளை பாதுகாப்பதற்கான போராட்டம் போன்ற உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகளினால் மக்களின் கவனம் திசை திருப்பப்படுகின்ற போதிலும், இலவச மருத்துவ சேவை போன்ற நலன்புரித்திட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.மகாத்மா காந்தி ஒரு தடவை கூறியது போன்று நல்ல சமுதாயம் என்பது பெரும்பான்மையினரதோ அல்லது சிறுபான்மையினரதோ நல்வாழ்வை அல்ல சகலரினதும் நல்வாழ்வைப் பாதுகாப்பதாக இருக்கவேண்டும்.

**இரு தரப்பு ஆதரவு**

நான் மேற்கூறிய அனுபவங்கள் நேர்மையாகவும் கடுமையாகவும் உழைக்கும் அதேவேளை, கிடைக்கும் வருமானத்திற்குள் வாழ்க்கையைச் சமாளிக்க முடியாமல் துன்பப்படும் சாதாரண மக்களின் இடர்பாடுகளாகும்.

இந்த துன்பநிலையைக் கொண்டுவந்த பொருளாதார வீழ்ச்சிக்கு அவர்கள் எந்த வகையிலும் பொறுப்பாளிகள் இல்லை. பாதுகாப்பு படைகளையும் பயங்கரவாத தடைச்சட்டத்தையும் பயன்படுத்தி அறகலய போராட்டம் ஒரு வருடத்துக்கு முன்னர் அடக்கியொடுக்கப்பட்ட பிறகு பொதுமக்கள் அமைதியாக இருக்கிறார்கள். (எமது படைவீரர்கள் போரை எவ்வாறு வென்றார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி கூறியதைப் போன்று மனித உரிமைகள் சாசனத்தை கையில் வைத்துக்கொண்டு படையினர் அறகலயவை ஒடுக்கவில்லை) பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் விசாரணையின்றி, பிணை வழங்காமல் நீண்டகாலத்துக்கு ஆட்களை தடுத்துவைக்க முடியும்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப்பட்ட பிறகு மக்களின் மனநிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது.இலங்கையை அதன் அவலத்தில் இருந்து மீட்டெடுக்கும் அதிசயத்தை நிகழ்த்திக்காட்டுவதற்கு நாட்டு மக்களினாலும் சர்வதேச சமூகத்தினாலும் ஜனாதிபதிக்கு அவகாசம் கொடுக்கப்பட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஜனாதிபதியினதும் அவரது ஆதரவாளர்களினதும் எதிர்பார்ப்புகளும் அபிலாஷைகளும் நோக்கங்களும் கூடுதலான அளவுக்கு செயல்களை விடவும் வெறும் பேச்சுகளிலும் சட்டங்களை நிறைவேற்றுவதிலுமே மட்டுபடுத்தப்பட்டதாக இருக்கின்றன.

பொருளாதார மீட்சிக்கப்பால் இலங்கை சமுதாயத்தின் ஏனைய பிரச்சினைகளையும் கையாளுவதற்கு ஜனாதிபதி முயற்சிகளை முன்னெடுத்து வருகிறார்.

அவற்றில் முக்கியமானது இன நெருக்கடியும் இன,மத சமூகங்களுக்கிடையிலான நம்பிக்கையின்மையுமாகும். தற்போது ஜெனிவாவில் தொடங்கியிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் ஆராயப்படும் நிலையில், நீண்டகால வன்முறை,போர் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் பதில் கூறப்படாமல் இருக்கும் பிரச்சினைகளைக் கையாள இவ்வருட இறுதியில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் உறுதிபூண்டிருக்கிறது.

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை பரவலாக்கம் செய்யப்போவதாகவும் ஜனாதிபதி அவ்வப்போது கூறிவருகின்றார்.

வடக்கு, கிழக்கில் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்ற ஆக்கிரமிப்புகளுக்கு மத்தியில் தங்களது நில உடமைகளையும் விவசாயத்தையும் பாதுகாப்பதில் மக்களுக்கு இருக்கும் அக்கறைகளை கவனிப்பதிலும் ஜனாதிபதி முன்னுரிமை கொடுத்திருக்கிறார்.

பொருளாதாரம் மற்றும் இன உறவுகள் தொடர்பிலான இந்தப் பிரச்சினைகளில் பெரும்பாலானவற்றில் தங்களைப் பாதுகாக்கக்கூடிய மாற்றம் எதையும் மக்களினால் இன்னமும் காணமுடியவில்லை.

அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் ஒரு தரப்பை மறு தரப்பு உச்சிமுந்துவதிலும் அடுத்த தேர்தலில் வெற்றிபெறுவதிலும் அக்கறை காட்டுவதற்குப் பதிலாக நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய பொருளாதார மற்றும் இன விவகார கொள்கைகளில் இணக்கத்தைக் காணவேண்டியது அவசியமாகும். எதிரணி அரசியல் கட்சிகள் அவற்றின் நடத்தைகளில் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டு அரசாங்கத்துடன் மக்களை மோதவைக்காத அணுகுமுறைகளை கடைப்பிடிப்பதும் நாட்டில் உறுதிப்பாடும் அமைதியும் நிலவுவதற்கு ஓரளவுக்கு காரணம்.

எதிரணிக் கட்சிகள் அரசாங்கத்துக்கு நேர்மறையான ஆதரவை வழங்கி தற்போதைய நிலைவரம் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தி பிரச்சினைகளை எவ்வாறு கையாளலாம் என்பதற்கான சிறந்த சிந்தனையை முன்வைக்கவேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்வதன் மூலம் மக்களின் தேவைகளையும் அபாலாஷைகளையும் நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்துக்கு வலுவூட்டி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்கச்செய்யக்கூடியதாக இருக்கும்.


கலாநிதி ஜெகான் பெரேரா

## இன்றைய நாளில்...

- 658 – மூன்றரை மாத கால முற்றுகையின் பின்னர் போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.
- 1930 – ஈழகேசரி வார இதழின் முதல் இதழ் வெளியானது.
- 1957 – சோவியத் ஒன்றியம் முதற்றடவையாக ஆர்-12 ரக ஏவுகணையை வெற்றிகரமாகப் பரிசோதித்தது.
- 1978 – புளூட்டோவின் சரோன் துணைக்கோள் கண்டுபிடிக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

பேசாமல் முட்டை போல இந்த பேக்கரி உணவுப்பொருட்களையும் இறக்குமதி செய்தா நல்லதில்லையோ...?



# அமைப்புகளுக்கிடையிலான முரண்பாடுகள் எதிர்கால சமூகத்துக்கு சவாலாகவே அமையும்

## அ. இ. வை. எம். எம். ஏ.பேரவையின் முன்னாள் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி



இக்பால் அலி

சமூக மேம்பாட்டுக்காக செயற்படும் தேசிய சிவில் சமூக அமைப்புகள் ஒன்றுடனொன்று சார்ந்துள்ள போதிலும், குறித்த அமைப்புகள் முரண்பட்டுக்கொண்டு சமூக ஊடகங்களில் பகிரங்கமாக ஒன்றையொன்று விமர்சித்துக் கொண்டிருக்கின்றன. இதனால் சமூகத்தின் இலக்குகளை வெற்றிகொள்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கவேண்டி வரும். இத்தகைய செயற்பாடுகள் எதிர்கால சமூகத்துக்குப் பெரும் சவாலாகவே அமையும் என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபைக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவருக்குமிடையிலான கருத்து முரண்பாடுகள் சமூக ஊடங்களில் பகிரங்கமாகப் பேசப்படுகின்றன. இந்த அணுகுமுறை ஆரோக்கியமானதல்ல. சமய விவகாரங்கள் எனும்போது ஜம்மிய்யதுல் உலமா சபையும் தேசிய விவகாரங்கள் எனும் போது அரசியல் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புகள் அனைத்தும் இணைந்து செயற்பட வேண்டும்.

தேசிய சிவில் சமூக அமைப்புகள் ஒன்று சேர்ந்து செயற்படும்போதுதான் அது வலுமிக்கதாக அமையும். எனினும், ஒரு தேசிய சிவில் சமூக அமைப்பு செயற்படும்போது அதற்கு ஏனைய அமைப்புகளுடைய ஒத்துழைப்பு அவசியம். ஒரு வேலையை இரண்டுபேர் செய்யக்கூடாது. அந்த அமைப்புக்கு எந்தத் துறையைச் செய்வதற்கான திறமை இருக்கின்றதோ அதனை அவ்வமைப்பு சுயமாகச் செய்வதற்கு வழிவிட வேண்டும். ஒவ்வொரு சமூக அமைப்பும் ஆளுமையும் - வல்லமையும் மிக்கவை என்ற மனோ நிலையை அறிந்து செயற்பட வேண்டும்.

அந்த வகையில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய விவகாரங்களுக்கான பிரிவு பல்லின சமூகங்களுக்கிடையே நிலையான சகவாழ்வுக்கும் - ஒற்றுமைக்கும் - பரஸ்பர நட்புறவுக்கும் வழிகோலும் நடவடிக்கைகளை அரச தரப்பினர்களுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றது.

சிவில் சமூக சேவை அமைப்புகள் பொது விவகாரங்களில் உடனடியாகக் கூடிக் கலைவது அல்லது அவை பற்றி சமூக ஊடகங்களில் அறிக்கை விடுதல் போன்ற விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்துபவையாகவே உள்ளன. அதற்கு மாறாக யாரைக் கொண்டு பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியுமோ அவர்களிடத்திலே குறித்த விடயம் பற்றி பொறுப்பு சாட்டி தீர்வைப் பெற்றுக் கொள்ளுகின்ற நடவடிக்கைகளையே வை. எம். எம். ஏ இன் தேசிய விவகாரப் பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

இந்நாட்டில் பொதுவாக முஸ்லிம்களுடைய உரிமைகள் சம்பந்தமான விடயங்களில் இடைக்கிடையே அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதும் உண்டு. அந்த அச்சுறுத்தலை விடுக்கின்ற தரப்பினர்களிடத்தில் பிரச்சினைகளை நேரடியாகக் கதைத்து வேற்றுமையில் ஒற்றுமையைக் காணுகின்ற நடவடிக்கைகளை மேற்படி பிரிவு இதுவரை மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு மேற்கொள்வதன் காரணமாக புகைந்து எழுந்து வரும் பிரச்சினைகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படுவதுடன், இனிமேல் தொடராமல் இருப்பதற்கான வேலைத் திட்டங்களையும் படிப்படியாக முன்னெடுப்பதற்கான காரியங்களை அது மேற்கொண்டு வருகின்றது என்றும் தெரிவித்தார்.

# சாவகச்சேரி மக்களுக்கு தீர்த்த கிணற்றிலிருந்து குடிதண்ணீர்

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள நல்ல தண்ணீர் கிணற்றை சுத்திகரித்து பிரதேச மக்களும் பயணிகளும் பயன்பெறும் வகையில் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட போது அந்தப் பகுதிக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்த அமைச்சர், தொல்லியல் திணைக்கள அதிகாரிகளை வரவழைத்து இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

குறித்த கிணறு சோழர்களினால் அமைக்கப்பட்ட சிவன் கோயிலின் மூலஸ்தானத்துக்கான தீர்த்தக் கிணறு என்பது ஆய்வு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டமையினால் தொல்லியல் திணைக்களத்தினால் பாதுகாக்கப்படவேண்டிய பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அமைச்சருடனான சந்திப்பின் போது, இக்கிணற்றின் கட்டுமானங்களில் பாதிப்பை ஏற்படுத்தாமல் மக்களுக்கான குடிநீரை வழங்குவதற்கு தொல்லியல் திணைக்களத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.





தொல்லியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்) பந்துல ஜீவ, புனர்நிர்மாணப் பொறுப்பதிகாரி ராகினி மற்றும் மேலாய்வு உத்தியோகஸ்தர் தஷிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கண்டி வைத்தியசாலைக் காணி சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு







கண்டி நிருபர்

கண்டி தேசிய வைத்தியசாலைக்குச் சொந்தமான காணி சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக வைத்திய சாலைப் பணிப்பாளர் இரேசா பெர்னாண்டோ தெரிவித்தார்.

கண்டி மாவட்ட ஒழுங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்றது. அந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,கண்டி தேசிய வைத்தியசாலைக்குச் சொந்தமான 50 ஏக்கர் நிலப்பரப்பு தற்போது சுமார் 30 ஏக்கர் அளவு நிலப்பரப்பாகவே காணப்படுகிறது. எஞ்சிய காணி சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக் கட்டடத்துக்கு பாதிப்பு ஏற்படும் எனக் கருதி சில தினங்களுக்கு முன் வைத்தியசாலைக் காணியிலிருந்த பாரிய மரமொன்றை வெட்டி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது அந்த மரம் இருந்த இடத்தை தனியார் ஒருவர் அபகரித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறையிட்டபோதும் அதுகுறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான குணதிலக ராஜபக்ஷ தெரிவித்ததாவது,

கண்டி தேசிய வைத்தியசாலைக்குச் சொந்தமான காணியை சட்டவிரோதமாக அபகரித்துள்ளவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு அனைத்து அரச ஊழியர்களுக்கும் உண்டு. இதிலிருந்து யாரும் தப்பிச் செல்ல முடியாது. ஏனெனில், இலங்கையின் இரண்டாவது தேசிய வைத்தியசாலையாக கண்டி தேசிய வைத்தியசாலை காணப்படுகிறது. கண்டி மாவட்டத்துக்கு மட்டுமன்றி, நாட்டின் இதர பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் கண்டி தேசிய வைத்தியசாலையின் ஊடாகவே சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடிகிறது.வைத்தியசாலைக்குரிய 50 ஏக்கரில் 30 ஏக்கர் மட்டுமே மிகுதியாக இருப்பது மிகவும் பாரதூரமான விடயம். கடந்த காலங்களில் படிப்படியாக காணி கைப்பற்றப்பட்டு வந்துள்ளது. வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்கு இது பாரிய அச்சுறுத்தலாக உள்ளது என்றார்.

# ஊடக சுதந்திரத்துக்கு பாதிப்பு ஏற்படாது

## இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர்





கண்டி நிருபர்

ஊடக சுதந்திரத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது என்று இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டப் பயனாளிகளுக்கு வீடமைப்புக்கான உதவித்தொகை கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்றது. அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எதிர்க்கட்சிகள் கூறுவதுபோல் ஒருபோதும் அரசு ஊடக சுதந்திரத்தைத் தடுக்காது. அதேநேரம், கொண்டுவரப்படவுள்ள புதிய சட்ட மூலம் ஊடாக ஊடக சுதந்திரம் மேலும் உறுதிசெய்யப்படும். தற்போது சமூக வலைத்தளங்களில் எத்தனையோ போலி அமைப்புகள் உள்ளன. அவையே இது தொடர்பாகப் பயப்பட வேண்டும்.

தற்போது நாட்டில் அநேகமான பிரச்சினைகள் தீர்ந்து விட்டன. பொருட்கள் மீதான தட்டுப்பாடுகள் நீங்கியுள்ளன. அத்துடன், அபிவிருத்திப் பணிகளை நாம் நிறுத்தவில்லை. எதுவித பாகுபாடுமின்றி நாம் வீடமைப்பு உதவிகளை வழங்கி வருகிறோம் என்றார்.

# இளைஞர் பாராளுமன்றத்தின் சட்டம் திருத்தப்பட வேண்டும்

## இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அஹ்மத் சாதிக்





பேருவளை நிருபர்

இளைஞர் பாராளுமன்றம் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் (எண். 69) சட்டத்தைச் சார்ந்துள்ளது. ஆனால், இளைஞர் பாராளுமன்றத்தின் சட்டம் திருத்தப்பட வேண்டுமென வெளிவிவகார பிரதி அமைச்சரும் பேருவளை பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான அஹ்மத் சாதிக் தெரிவித்தார்.

ஐந்தாவது இளைஞர் பாராளுமன்றத்தின் மூன்றாவது அமர்வு ஜூன் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் கொழும்பு பழைய பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெற்றது. ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் பசிந்து குணரத்ன மற்றும் பிரமுகர்கள் இவ்வமர்வில் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர் பாராளுமன்றம் என்பது தேசிய இளைஞர் சேவைகள் மன்றச் சட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டிய ஒன்றல்ல. அது சுயாதீனமாக தேசிய பாராளுமன்றத்தின் கீழ் வரவேண்டும்.

இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும்போது இளைஞர்களின் வயது வரம்பு மற்றும் கல்வித் தகைமைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். குறைந்த பட்சம் க. பொ. த. உயர் தரப் பரீட்சையிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடையும் போது சேவைக் காலத்தை அவர்களுக்கு ஒரு பட்டப்படிப்பாக சான்றிதழ் வழங்கவேண்டும்.

இதற்கு முன்னர் எந்தவொரு இளைஞர் பாராளுமன்றமும் எதிர்கொள்ளாத சவால்களை இம்முறை இந்த இளைஞர் பாராளுமன்றம் சந்தித்தது. கொவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலைகளால் இளைஞர் பாராளுமன்றத்துக்கு சரியாகச் செயற்பட முடியவில்லை. நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் இளைஞர் பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை எதிர்மறையாகப் பாதித்தன. பலவீனமான இளைஞர் பாராளுமன்றமாக இருந்தாலும் என்னால் முடிந்த அளவில் செயற்றிட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளேன் என்றும் கூறினார்.

# காணி உரிமை கோரி ஹட்டனில் எதிர்ப்பு பேரணி




பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக்கொடுக்குமாறு கோரி பெருந்தோட்ட காணி உரிமைக்கான அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்புப் பேரணி நேற்று (21) ஹட்டனில் இடம்பெற்றது.

பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் நிறைவடைந்திருந்தாலும் இதுவரையில் இந்த மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படாமலிருப்பது கவலைக்குரிய விடயமாகுமென்று அவ் அமைப்பின் தலைவர் எஸ்.கணேசலிங்கம் தெரிவித்தார்.

மேலும், பெருந்தோட்ட மக்களுக்கு தோட்டங்களில் வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டிருந்தாலும் ஒருசில வீடுகளுக்கு போலியான காணி உரிமங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வீடுகளுக்கு சரியான உரிமங்கள் இன்னும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

பெருந்தோட்ட மக்களும் இந்த நாட்டின் பிரஜைகளாவர். அவ்வாறிருக்கையில், அந்த மக்களுக்கு முறையாக காணி உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டும். ஜூன் 21ஆம் திகதி காணி உரிமைக்கான தினமாக அறிவிக்கப்பட்டிருந்ததற்கமைய எதிர்வரும் ஒவ்வொரு வருடமும் இந்தத் தினமும் நினைவுகூரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.







டவர் மண்டப அரங்கத்தினால் நடத்தப்படும் நாடக உயர் டிப்ளோமா கற்கைநெறிக்காக மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வு விஜயராம மாவத்தையிலுள்ள டவர் மண்டப அரங்க மன்றத்தில் (20)இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலாசார அமைச்சின் செயலாளர், பிரதிச் செயலாளர், டவர் அரங்கப் பணிப்பாளர் கலாநிதி டி.எம்.எஸ். திஸாநாயக்க, உயர் டிப்ளோமா பாடநெறிக்கான பொறுப்பாளர் கலாநிதி சண்முக சர்மா ஜெயப்பிரகாஸ் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். **படங்கள்:** எம்.நசார்

# ஜனவசம-யாக்கம் - எல்கடுவ பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து விசேட கவனம்

## பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவில் இன்று முக்கிய பேச்சு





அரசாங்கத்தின் கீழ் இயங்கும் பெருந்தோட்ட நிறுவனங்களான ஜனவசம, பெருந்தோட்ட யாக்கம், எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம் உள்ளிட்டவற்றின் தொழிலாளர்கள் நீண்ட காலமாக தீர்க்கப்படாத பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பில் நேற்றைய தினம் (21) பாராளுமன்ற உறுப்பினர் களான வடிவேல் சுரேஷ், வேலுகுமார் மற்றும் சுஜித் சஞ்சய் பெரேரா ஆகியோர் தொழில் ஆணையாளரைச் சந்தித்து தெளிவுபடுத் தியுள்ளனர்.

மேலும் இது தொடர்பில் இன்று (22) இடம்பெறவுள்ள பாரளுமன்ற மேற் பார்வைக்குழுவிலும் முக்கிய தீர்மானம் எடுக்கப் படவுள்ளதாக பாரளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வடிவேல் சுரேஷ் எம்.பி.,

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களினால் ஊழியர் சேமலாப நிதி ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவை வழங்கப்படாமையினாலும் முறையற்ற ரீதியில் காணிகளைப் பகிர்ந்தளிப்பதனாலும் பெருந்தோட்ட மக்கள் மிக மோசமான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பல கோடி ரூபா நிதி முறையான புள்ளி விபரங்கள் இல்லாமையினால் மத்திய வங்கியில் தேங்கியுள்ளது. உரியவர்களை அடையாளம் கண்டு உடனடியாக அவற்றைச் சீர்செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் நாம் இதன்போது வலியுறுத்தியிருந்தோம்.

காணிகளை பகிர்ந்தளிக்கின்றபோது தொழில் புரியும் தொழிலாளர்களுக்கும் பிரதேச மக்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். அதனைத் தவிர்த்து வெளியாட்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படுவதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் அதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் .மேற்படி விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் 22 ஆம் திகதி பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவில் தீர்மானம் எடுக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

# ஹட்டன் -மல்லியப்பு வில்பூட் குறுக்கு வீதியில் நிலச்சரிவு





மனுர சுதத் செல்லஹேவா

ஹட்டன், மல்லியப்பு வில்பூட் குறுக்கு வீதியின் கீழ்ப் பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால் அந்த வீதியின் கீழுள்ள வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் கடந்த மூன்று நாட்களாக பெய்த கடும் மழைவீழ்ச்சியின் காரணமாக இந்த வீதியின் கீழ் பகுதியில் மண் மற்றும் கல் என்பன உடைந்து அந்த வீதிக்கு கீழிருந்த மூன்று வீடுகளின் மீது விழுந்ததால் சிறியளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடர்பில் அந்த வீடுகளின் உரிமையாளர்கள் கருத்து தெரிவிக்கையில்,

வீதியின் ஒரு பகுதி வெடிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் இதன் காரணமாக இந்த வீதியின் ஒரு பகுதி எப்போதாவது உடைந்து விழும் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பயணச்சீட்டு வழங்காமல் பயணிகளை அவமதித்த பஸ் நடத்துனர்கள் இருவருக்கு தடை விதிப்பு

ஹட்டன்- சலங்கந்த வீதியில் பயணச்சீட்டைக் கொடுக்காமலும் பயணிகளைப் பொருட்படுத்தாமலும் செயற்பட்ட இரு தனியார் பஸ்களின் நடத்துனர்கள் இருவருக்கு 14 நாட்களுக்கு சேவையினின்றும் தடைவிதிப்பதற்கு பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் ஹட்டன் காரியாலயம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரியின் ஹட்டன் காரியாலயத்தின் பொறுப்பதிகாரி கே.பி.அனுர சில்வாவை வினவியபோது,

ஹட்டனிலிருந்து பயணிக்கும் ஒருசில தனியார் பஸ்களில் சேவையாற்றும் ஒருசில நடத்துனர்கள் மட்டுமே பயணச்சீட்டைக் கொடுக்காமலும் பயணிகளைத் திட்டுவதாகவும் ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தோம்.

அந்த விசாரணைகளின் பலனாக ஹட்டன் - சலங்கந்த வீதியில் பயணிக்கும் இரு பஸ்களின் நடத்துனர்கள் இவ்வாறு பயணச்சீட்டுக் கொடுக்காமல் பயணிகளை அவமதிக்கும் வகையில் திட்டிவந்துள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் மத்திய மாகாணப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையின் போக்குவரத்து மற்றும் சுற்றிவளைப்பு பொது முகாமையாளர் கே.பி. பஸ்நாயக்கவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் இவர்கள் இருவரையும் இவ்வாறு 14 நாட்களுக்கு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, மத்திய மாகாணப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையின் போக்குவரத்து மற்றும் சுற்றிவளைப்பு பொது முகாமையாளர் பஸ்நாயக்கவின் தலைமையில் தனியார் பஸ்களில் பயணிக்கும் பயணிகளுக்கு கட்டாயம் பயணச்சீட்டு கொடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் பயணிகளிடம் மதிப்புடன் நடந்துகொள்ளவேண்டியது தொடர்பிலும் தனியார் பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கும் விழிப்புணர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.



**உக்குவளையைச் சேர்ந்த எம்.எம்.சபீர், குரீவெலயைச் சேர்ந்த எம்.பர்சான் ஆகியோர் தமது 23 வருடகால சமூகப் பணிகளி லீடுபாடுகள் (சமூக நலன் புரி அமைப்புகள்) காரணமாக கலாசார அலுவல்கள் அமைச்சர் விதூர விக்ரமநாயக்கவினால் "தேசமான்ய" பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வு கண்டி குயீன்ஸ் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.**

# ஹட்டன் உள்ளிட்ட பகுதிகளில் முட்டை விலை அதிகரிப்பு

மனுர சுதத் செல்லஹேவா

அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலைக்கு முட்டையை விற்பனை செய்ய முடியாது என்று ஹட்டன் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களிலுள்ள வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கம், வெள்ளை முட்டைக்கு 44 ரூபாவும், சிவப்பு முட்டைக்கு 46 ரூபாவும் கட்டுப்பாட்டு விலையை விதித்தாலும், ஹட்டன் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் கட்டுப்பாட்டு விலைக்கு முட்டையை கொள்வனவு செய்வதில்லை என்று நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் அவர்கள் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இதுவரையில் இந்தப் பிரதேசங்களில் முட்டையொன்று 55 ரூபா முதல் 60 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை வியாபாரிகள் கணக்கில் கொள்ளாமல் அதிக விலைக்கு விற்பனை செய்வதால் தாம் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகக் குறிப்பிட்டனர்.

இந்த நிலைமை தொடர்பில் முன்னெடுக்கப் பட்ட விசாரணைகளின் போது கருத்து தெரிவித்த முட்டை வியாபாரிகள் சிலர், அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைக்கு முட்டை விற்பனை செய்ய முடியாதென்றும் அந்தக் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க மொத்த விலை அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்கள். இதேவேளை, இந்நிலைமையின் காரணமாகவே முட்டை விலை அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

# நீண்ட நாட்களுக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பமாகவுள்ள குமுதினி படகுச் சேவை





யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் பகுதிக்கும் நெடுந்தீவுக்குமிடையில் சேவையில் ஈடுபட்டுவந்த குமுதினி படகு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பழுதடைந்துள்ளது.

படகின் திருத்த வேலைகள் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றன. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 70 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் படகின் திருத்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

படகின் திருத்த வேலைகள் முடிவடைந்த நிலையில் நேற்று முன்தினம் (20) செவ்வாய்க்கிழமை படகை கடலுக்குள் இறக்குவதற்கு முன்னர் பாரம்பரிய முறைப்படி பொங்கல் பொங்கி படைக்கப்பட்டு , படகு கடலினுள் இறக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை கடற்பகுதியில் இரு நாட்கள் படகு தரித்துநின்று, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கடல் போக்குவரத்து தொடர்பிலான அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் படகின் தரம் மற்றும் திருத்த வேலைகள் தொடர்பில் ஆராய்ந்து பயணிகள் சேவைக்கு அனுமதி வழங்கிய பின்னர் மீண்டும் குமுதினி படகு சேவையில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமுதினி படகானது 1968ஆம் ஆண்டுமுதல் நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவனுக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வருகின்றது. பல தடவைகள் பழுதடைந்தபோதிலும், படகை மீள திருத்தி சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது.

கடந்த 1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி இந்தப் படகில் பயணித்த 33 பேர் கடற்படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழ். முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் - அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு



யாழ். மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் உறுப்பினர்களைச் சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முச்சக்கரவண்டிச் சேவையை வினைத்திறனான சேவையாக மாற்றுவது தொடர்பாகவும் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

குறிப்பாக, முச்சக்கரவண்டி கட்டண அறவீடுகள் தொடர்பாக தனக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் அனைத்து முச்சக்கரவண்டிகளுக்கும் மீற்றர்களை (கட்டண வாசிப்பு மாணி) பொருத்துவதற்கு முச்சக்கரவண்டி உரிமையாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோன்று முச்சக்கரவண்டி தரிப்பிடம் மற்றும் தரிப்பிட பங்கீடு தொடர்பாக மாநகர சபை அதிகாரிகள், பொலிஸாருடன் கலந்துரையாடி சரியான வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கும் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். இக்கலந்துரையாடலில் மாநகர சபை ஆணையாளர் மற்றும் யாழ். மாநகர போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். அதேவேளை, யாழ். நகரப் பகுதியில் வியாபார நிலையங்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறில்லாத வகையில் சந்தை வியாபாரிகள் வியாபார நிலையங்களுக்கான பொருட்களை பாரவூர்திகளில் ஏற்றி இறக்குவதை ஒழுங்குபடுத்துவது உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக யாழ். வர்த்தகர் சங்கத்தின் தலைவர் ஜெயசேகரம் தலைமையிலான சங்கத்தின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இக்கலந்துரையாடல்களில் யாழ். மாநகர சபையின் ஆணையாளர் ஜெயசீலன் மற்றும் யாழ். நகர போக்குவரத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# வவுனியாவில் தீப்பற்றி எரிந்த வீட்டிலிருந்து சடலம் மீட்பு

வவுனியா நிருபர்

வவுனியா,தேக்கவத்தை பகுதியில் நேற்று (21) அதிகாலை தீப்பற்றி எரிந்த வீட்டிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

குறித்த வீடு தீப்பற்றி எரிவதைக் கண்ட அயவலர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் மாநகர சபை தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தனர்.

இதனையடுத்து வீட்டுக்குள் சென்றபோது குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன் தடயவியல் பொலிஸாரின் உதவியையும் நாடியுள்ளனர்.

# ஒன்பதாவது சர்வதேச யோகா தின நிகழ்வு யாழில்







யாழ். நிருபர்

ஒன்பதாவது சர்வதேச யோகா தின நிகழ்வு யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வு யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் நேற்று புதன்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெற்றது.

யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட யோகா தின நிகழ்வில் யோகா பயிற்சி வழங்கப்பட்டது. இதன்போது ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

குறித்த நிகழ்வில் யாழ். மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா, வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ்ப்பாணப் படைகளின் கட்டளைத் தளபதி ஹெட்டியாராச்சி, யாழ். இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். மேலும் யோகா பயிற்சி நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், கல்வியியலாளர்களும் கலந்துகொண்டனர்.

# மோட்டார்சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

வவுனியா நிருபர்

வவுனியா- பூந்தோட்டம் பிரதான வீதியில் நேற்று முன்தினம் (20) மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கணவன், மனைவி காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள தமது வீடுநோக்கி மோட்டார்சைக்கிளில் சென்ற கணவன், மனைவியை வேகமாக வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த இருவரும் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்துக்கு காரணமான இளைஞன் தான் பயணித்த மோட்டார் சைக்கிளை கைவிட்டு தப்பி ஓடியுள்ளார். எனினும், குறித்த பகுதியில் ஒன்றுகூடிய இளைஞர்கள் அந்த இளைஞனைப் பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை, விபத்தை ஏற்படுத்திய நபர் மதுபோதையில் இருந்தாரா என வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

# பெருந்தோட்ட நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்

## அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தீர்மானம்





இந்நாட்டிலுள்ள பெருந்தோட்ட நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் நடைபெற்ற பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இது குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

அரசாங்கத்தினால் தனியாருக்கு வழங்கப்பட்ட பெருந்தோட்ட நிறுவனங்கள் தேயிலை உற்பத்தியைவிட வேறு தொழில்களில் நாட்டம் காண்பிப்பதாகவும் தோட்டங்களை சரியான முறையில் பராமரிக்காமல் இருப்பதுடன், பணியாளர்களுக்கு நலன்புரி சேவைகளை வழங்குவதில்லையென்றும் இவ்வாறான பெருந்தோட்ட நிறுவனங்களைக் கண்காணிப்பதற்கு உரிய பொறிமுறையொன்று இல்லையென்றும் இங்கு கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இந்தப் பெருந்தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களுக்குக் குறைந்த தொகையைச் செலுத்துவதுடன், அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கூட செய்துகொடுப்பதில்லையென்றும் சுட்டிக்காட்டப்பட்டது. மிகவும் மோசமான குத்தகை ஒப்பந்தத்துக்கு அமையவே இந்தப் பெருந்தோட்டங்கள் தனியார் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனால் அரசாங்கத்துக்கு இந்தப் பெருந்தோட்ட நிறுவனங்கள் குறித்த கட்டுப்பாடும் மோசமான நிலையிலேயே இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிறுவனங்கள் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதில்லை. விசேடமாக சில நிறுவனங்கள் தேயிலை பயிர்ச்செய்கையிலிருந்து விடுபட்டிருப்பது தெரியவந்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இவ்வாறான நிறுவனங்களின் கீழ் பல ஹெக்டயர் காணிகள் பயிர்ச்செய்கை எதுவுமின்றி பயன்படுத்தப்படாமல் இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது என்றார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி விரைவில் தீர்மானமொன்றை எடுக்க எதிர்பார்ப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தென்னை போன்ற பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகளில் காணப் படும் பிரச்சினைகள், பூச்சித் தாக்கங்களால் அவற்றுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. பூச்சித்தாக்கம் காரணமாக மாத்தறை மாவட்டத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த தென்னைப் பயிர்ச்செய்கையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, வீ.இராதாகிருஷ்ணன், எம்.ராமேஷ்வரன், வீரசுமன வீரசிங்ஹ, உதயகாந்த குணதிலக, அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# நன்னீர் மீன்பிடித்துறையை மேம்படுத்த வடமாகண விவசாய அமைச்சு நடவடிக்கை



நன்னீர் மீன்பிடித்துறையை மேம்படுத்த வடமாகண விவசாய அமைச்சின் மீன்பிடிப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கிணங்க யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, அம்பன் களப்பு பகுதியில் 75,000 மீன் குஞ்சுகள் நன்னீர் நிலைகளில் நேற்று விடப்பட்டன.

அம்மன் பகுதியில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் சுமார் 500 நன்னீர் மீன்பிடியாளர்களின் தொழில் மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு 2,50,000 மீன் குஞ்சுகள் விடும் திட்டத்தின் கீழ் 75,000 மீன் குஞ்சுகள் தற்போது விடப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மீன்பிடிப் பிரிவு அதிகாரிகள், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க, அம்பன் நன்னீர் மீன்பிடிப்பாளர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடத்தும் நான் மறுபடியும் எனும் இசை நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை(20) மாலை கூட்டுத்தாபனத்தின் ஆனந்த சமரக்கோன் கலையரங்கில் இடம்பெற்றது. இதன்போது பாடகர்களான இசாக் பேக்,முவீனா பேக் பாடல்களைப் பாடினர். இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்ட ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பணிப்பாளர் நாயகம் நளின் குமார நிஸங்க, கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் ஆகியோர் இணைந்து பாடகர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தனர். இவ் இசை நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.




# யாழில் 150 ரூபாவுக்கு பாண் விற்பனை

பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதால் யாழ்ப்பாணத்தில் தற்போது 150 ரூபாவுக்கு பாண் விற்பனை செய்யப்படுவதாக யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பாணின் விலை பத்து ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதால் யாழ்ப்பாணத்தில் 150 ரூபாவுக்கு நேற்று புதன்கிழமை முதல் பாண் விற்பனை செய்யப்படுகிறது.

தற்பொழுது பாணின் விலையை மாத்திரமே குறைத்துள்ளோம். ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலையை குறைக்கவில்லை.

எதிர்வரும் காலங்களில் மாவின் விலை குறைக்கப்படுமாயின் அனைத்து பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளையும் குறைக்கத் தயாராகவுள்ளோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆளுமைகளுக்கு மகுடம் சூடிய மாபெரும் விழா!












## விருது வழங்கி கௌரவிக்கப்பட்டோர்


சிவஸ்ரீ கணேச பரமசிவன் குருக்கள்


ஜ. மகேந்திரன் பாஸ்டர்


மெ. ஆனந்தகுமார் (அதிபர்)


றெஜினா இளஞ்செழியன்


தனலட்சுமி மாதவன்


நேசமலர் ஆனந்தன்


சதாசிவம் உதயசாந்தன்


மருதமுத்து சிவகணேசமூர்த்தி


சுப்ரமணியம் சுசில்சாந்த


செ. விமல்


நாராயணசாமி ஜெயரட்ணம்


முருகேசன் சதீப்குமார்


ரஞ்சனி சுரேஷ்


ராசலிங்கம் தனராஜ்


என்டனி ஜெயசீலன்


தங்கராஜ் கல்யாணி


ஜெயராம் மோகன்ராஜ்


முருகேசு விக்னேஷ்வரன்


விஜயன் தனீஷா


விஜயன் ருக்ஷான்


யோகேஸ்வரன் கோகிலேஷ்வரி


சுப்ரமணியம் கிஷோகுமார்

புதிய வானம் வலைக்காட்சியின் மாபெரும் விருது வழங்கும் விழா களுத்துறை, இங்கிரிய, றைகம், கீழ்ப்பிரிவு விபுலானந்தா தமிழ் வித்தியாலயத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில், ஆன்மீகவாதிகள், கல்வியாளர்கள், சமூக தன்னார்வலர்கள், கலை, இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் கலைஞர்கள் உள்ளிட்டோருக்கு இந்த ஆண்டுக்கான புதிய வானம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

'தமிழன்' நாளிதழின் ஊடக அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பூமணி அம்மா அறக்கட்டளை, சர்வதேச தமிழ் வானொலி பிரான்ஸ், மலையக தேன்மொழி மக்கள் சேவை, அகலவத்தை கணபதி அறநெறிப் பாடசாலை உள்ளிட்ட அமைப்புகள் அனுசரணை வழங்கியிருந்தன. நிகழ்வில் சமய குருமார்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**படப்பிடிப்பு:** சுப்ரமணியம் கிஷோகுமார்



சாய்ந்தமருது அல்-ஹிலால் பாடசாலையில் தரம் 2 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக அலங்கரிக்கப்பட்ட வகுப்புகளை கையளிக்கும் நிகழ்வின் இறுதி நிகழ்வு பாடசாலை அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் புதன்கிழமை(21) இடம்பெற்றது. தரம் 2 டீ வகுப்பை பூரணமாக வர்ணம் பூசி அலங்கரித்து, வகுப்பறைக்குத் தேவையான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இதன்போது சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ.மலிக் மற்றும் பெற்றோர்களும் அதிதிகளாகக் கலந்து கொண்டிருந்தனர்.

**படம்:** *பொலிவேரியன் செய்தியாளர்*

# மட்டக்களப்பில் இடம்பெற்ற சர்வதேச யோகா தின நிகழ்வு



*களுதாவளை செய்தியாளர்*

சர்வதேச யோகா தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யோகாசன நிகழ்வு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் புதன்கிழமை(21) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கு.சுகுணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார்.

சிறப்பு அதிதிகளாக கிழக்கு பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் அருளானந்தம், கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட தலைவர் கலாநிதி தி.சதானந்தன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சித்த ஆயுர்வேத திணைக்கள வைத்தியர்களினால் யோகாசனம் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் யோகாசனப் பயிற்சியும் வழங்கப்பட்டது. இதன்போது யோகாசனத்தின் அவசியம் குறித்து பல்வேறு கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன் உடல் உள புத்துணர்ச்சிக்கு தேவையான யோகாசனப் பயிற்சியும் வழங்கப்பட்டது.




ஐகேம் அபாகஸ் (ICAM Abacus) நிறுவனத்தின் 7ஆவது தேசிய அபாகஸ் போட்டியில் சித்தியடைந்த மாணவர்களில் 44 பேர் சென்னையில் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் சர்வதேச போட்டியில் பங்குபற்ற செவ்வாய்க்கிழமை(20) பயணமானார்கள். இந்தப் போட்டியில் சாய்ந்தமருது தாறுல் இல்மு நிலைய மாணவர்கள் 04 பேர் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

**படம்:** *நிந்தவூர், சாய்ந்தமருது செய்தியாளர்கள்*



ஓட்டமாவடி கல்விக் கோட்டத்தின் கீழுள்ள அறபா நகர் முகைதீன் அப்துல் காதர் வித்தியாலய மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (20) இடம்பெற்றது. பாத்தி - மீரா பவுன்டேசனின் ஏற்பாட்டில் பாடசாலையில் கல்வி கற்கும் சுமார் 40 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன. பாடசாலை அதிபர் ஏ.யூ.எம்.நளீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மர்ஹூம் ஏ.எல்.மீராசாஹிப் குடும்ப உறவினர்கள், நண்பர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**படம்:** *மீராவோடை செய்தியாளர்*

# முனைக்காடு விவேகானந்தாவுக்கு நூல்கள் அன்பளிப்பு



*கல்லடி செய்தியாளர்*

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட முனைக்காடு விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் 1998ஆம் ஆண்டு தரம் ஐந்தில் கல்வி கற்ற மாணவர்கள் ஒன்றிணைந்து அவர்களுடன் சம காலப்பகுதியில் கல்வி கற்று அமரத்துவமடைந்த தங்களது தோழர் கு.மனோகரனின் நினைவாக சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான நூல்களை வித்தியாலய அதிபர் கை.தெய்வேந்திரகுமாரிடம் செவ்வாய்க்கிழமை(20) கையளித்தனர்.

அமரத்துவமடைந்த தமது தோழரது கனவுகள் மெய்ப்படவும் தாங்கள் கல்வி கற்ற பாடசாலையின் தற்கால மாணவ சமூகத்தின் உயர்ச்சிக்கு பாரிய பங்களிப்பு நல்கும் உயர்ந்த நோக்கத்துடன் தங்களுடன் கல்வி கற்று உள்நாட்டிலும் தாயகத்தை விட்டு வேறு தேசங்களில் புலம்பெயர்ந்து வாழும் தங்களது வகுப்பு தோழர்களை ஒன்றிணைத்து அவர்களது நிதிப்பங்களிப்புடன் முன்மாதிரியான இச் சேவையினை அவர்கள் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வித்தியாலய மாணவர்களின் நன்மை கருதி, வித்தியாலயத்துடன் இணைந்து தொடர்ந்து பயணிக்கவுள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் மேலுமொரு தொகுதி நூல்களை வித்தியாலய நிர்வாகத்திடம் கையளிக்கவுள்ளதாகவும் குறித்த வகுப்பு மாணவர்கள் இதன்போது தெரிவித்துள்ளனர்.

# ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது

*கோணாவத்தை செய்தியாளர்*

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெள்ளைப்பாதுகாப்பு வீதியில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து ஆயிரத்து 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கோவில் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து குறித்த பிரதேசத்துக்கு சென்று சந்தேகநபரை கைது செய்து புதன்கிழமை(21) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே ஜூலை 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com

# தம்பலகாமத்தில் இலவச நடமாடும் சேவை



*கிண்ணியா செய்தியாளர்*

கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தம்பலகாமம் பிரதேச செயலகமும் தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை புதன்கிழமை(21) தம்பலகாமம் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற குறித்த நடமாடும் சேவையில் இரத்தப் பரிசோதனை, கண் பரிசோதனை, பற் சிகிச்சை, வெளிநோயாளர் பிரிவு பொது வைத்திய சேவை, ஆயுர்வேத வைத்திய சேவை, ஆற்றுப்படுத்தல், சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவி பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ் வழங்கல், பொதுசன மாதாந்த உதவி கொடுப்பனவு, நோய் உதவி கொடுப்பனவு (புற்றுநோய், சிறுநீரக நோய்), மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணம் வழங்கல், முதியோர், தேசிய அடையாள அட்டை, இறப்பு பிறப்பு சான்றிதழ் தொடர்பான பல சேவைகளும் வழங்கப்பட்டன.

இதில் மீரா நகர், தம்பலகாமம், கோயிலடி, கல்மெடியாவ வடக்கு, புதுக்குடியிருப்பு, பொற்கேணி, பாலம்போட்டாறு உள்ளிட்ட கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இதில் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள வைத்தியர்கள், கப்பல்துறை சுதேச வைத்தியர்கள், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம்.எஸ்.ஹபீபுள்ளா, தம்பலகாமம் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சர்வதேச யோகா தின விழிப்புணர்வு நடைபவனி




*அப்துல்சலாம் யாசீம், மீனோடைக்கட்டு, கிண்ணியா செய்தியாளர்கள்*

சர்வதேச யோகா தினத்தையொட்டி திருமலை வளாக கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவபீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட யோகா விழிப்புணர்வு நடைபவனி புதன்கிழமை(21) இடம்பெற்றது.

வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் நிதி உதவியில் Trinco Aid நிறுவனத்தோடு இணைந்து இடம்பெற்ற குறித்த நடைபவனியினை கிழக்கு பல்கலைக்கழக திருமலை வளாக துணைத் தலைவர் திருமதி சந்திரவதனி ஜி.தேவதாசன் தலைமைதாங்கி வழிநடத்தினார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்துக்கு முன்னால் காலை 7.45 மணிக்கு ஆரம்பமான இந்நடைபவனி, தபாலக சந்தி வீதி வழியாகச் சென்று திருகோணமலை நகர சபைக்கு முன்னால் முடிவுற்றது.

இந்த விழிப்புணர்வு நடைபவனியில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர், கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவபீட விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், சுதேச மருத்துவத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சித்த மருத்துவபீட மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# குச்சவெளி பிரதேச சபையால் கொட்டப்படும் குப்பைக் கூளங்களினால் சூழல் மாசடைவு

## நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை



*அப்துல்சலாம் யாசீம்*

திருகோணமலை - குச்சவெளி பிரதேச சபையினால் ஜாயா நகரை அண்மித்த சல்லிமுனை பகுதியில் கொட்டப்படும் குப்பைக் கூளங்களினால் அப்பகுதி சூழல் மாசடைவதாக பிரதேசவாசிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்நிலையில், சூழல் மாசடைவது மட்டுமல்லாமல் காட்டு யானைகளின் அட்டகாசம் மற்றும் டெங்கு நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் மழைக் காலங்களில் வெள்ள நீர் பெருக்கெடுத்து குப்பைகளை கடல் பகுதிக்கு கொண்டு செல்கின்றது. இதனால் கடல் வளங்களும் அழிகின்றன. இவ்விடயம் தொடர்பாக முன்னாள் கிழக்கு ஆளுநரிடம் கூறியபோது சம்பவ இடத்துக்கு அவர் வருகை தந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, குச்சவெளி பிரதேச சபை குப்பைகளை கொட்டுவதற்கு இடம் ஒன்றினை ஒதுக்கி ஒரே இடத்தில் குப்பைகளை கொட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது பல்வேறு இடங்களில் குப்பைகள் கொட்டப்படுவதினால் அப்பகுதியில் உள்ள மக்கள் மிகவும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

ஆகவே, மிக விரைவாக குப்பை கொட்டுவதற்குரிய தனியான இடம் ஒன்றை ஒதுக்கி சூழல் மாசடைவதற்கு வழி வகுக்காத வகையில் குச்சவெளி பிரதேச சபை செயல்பட வேண்டும் எனவும் பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தண்டப்பணம் விதிப்பு

*கோணாவத்தை செய்தியாளர்*

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றிவந்த டிப்பர் வாகன உரிமையாளர்களுக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த இரு டிப்பர் வாகனத்தை உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த இரு வாகனத்தையும் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா முன்னிலையில் புதன்கிழமை(21) ஆஜர்படுத்தியபோது ஒரு டிப்பர் வாகனத்துக்கு 15ஆயிரம் ரூபாவும் மற்றைய டிப்பர் வாகனத்துக்கு 20ஆயிரம் ரூபாவுமாக தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

வாகன உரிமையாளர்களினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது.

# கொரிய நாட்டு தற்காப்புக் கலை பயிற்சிநெறி ஆரம்பம்






*சீனக்குடா செய்தியாளர்*

கிழக்கு மாகாணத்தில் முதல் தடவையாக கிண்ணியா பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு TAEKWONDO என்ற கொரிய நாட்டு தற்காப்புக் கலை பயிற்சிநெறி செவ்வாய்க்கிழமை(20) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிண்ணியா மத்திய கல்லூரி பழைய மாணவர் விளையாட்டு பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயிற்சிநெறி கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

முதற்கட்டமாக, கிண்ணியா வலய பாடசாலைகளில் இருந்து 200 மாணவர்கள் இந்த பயிற்சி நெறிக்காக தெரிவு செய்யப்பட்டு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் பிரதான வளவாளராக ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் TAEKWONDO கலையின் பயிற்றுவிப்பாளரும் தேசிய சங்க உறுப்பினருமான சாணக, தனது மாணவர்களுடன் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், கிண்ணியா வலயக்கல்வி பணிப்பாளர் ஏ. நாகூர்கான், கந்தளாய் வலயக் கல்விப் பணிப்பாளர் தர்மதிலக, கிண்ணியா வலயக்கல்வி அலுவலக உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.அக்மல், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி போதனாசிரியரும் கிண்ணியா மத்திய கல்லூரி பழைய மாணவர் விளையாட்டு பேரவையின் தலைவருமான எம்.சி.எம்.ரிஸ்வி, கிண்ணியா மத்திய கல்லூரி அதிபர் எம்.எம்.முலவ்பர் மற்றும் நிகழ்ச்சிக்கான அனுசரணையாளர் என்.எம்.நௌபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி போதனாசிரியரும் கிண்ணியா மத்திய கல்லூரி பழைய மாணவர் விளையாட்டு பேரவையின் தலைவருமான எம்.சி.எம்.ரிஸ்வியின் வழிகாட்டலின் கீழ், இந்த தற்காப்பு பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கதிர்காமத்திலிருந்து சென்ற யாத்திரை பஸ் விபத்து

## 09 பேர் வைத்தியசாலையில் அனுமதி

*சம்மாந்துறை செய்தியாளர்*

கதிர்காமத்தில் இருந்து யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு அம்பாறை வழியூடாக மட்டக்களப்புக்குச் சென்று கொண்டிருந்த தனியார் போக்குவரத்து பஸ் ஒன்று புதன்கிழமை(21) அதிகாலை 03 மணியளவில் சம்மாந்துறை வங்களாவடிப் பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பஸ்ஸில் 54பேர் வரையானோர் பயணித்துள்ளனர்.

விபத்தின்போது 09 பேர்வரை காயமடைந்த நிலையில், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை, பஸ் சாரதி விபத்து நடந்தவுடன்



தப்பியோடியுள்ளதாகவும் அவரை கைது செய்ய மேலதிக விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

## கிழக்கு ஆளுநர் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம்

# இருநாடுகளின் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பது குறித்து கலந்துரையாடல்

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், மியாசாகி பாராளுமன்ற உறுப்பினர் ஷிம்பே மட்ஷிதாவை சந்தித்து கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பது குறித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் நீண்டகால நண்பரான மியாசாகியின் பாராளுமன்ற உறுப்பினர் ஷிம்பே மட்ஷிதாவின் அழைப்பின் பேரில் ஆளுநர் செந்தில் தொண்டமான் ஜப்பான் பாராளுமன்றத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். இலங்கை மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் இருதரப்பு சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல் குறித்தும் கலந்துரையாடினார்.

ஜப்பானில் உள்ள மியாசாகி கடற்கரைக்கு வருகைதரும் உலாவர்கள்(surfers) ஊடாக



இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள உலகத் தரம் வாய்ந்த உலாவல் இடங்களில் ஒன்றான அருகம்பே கடற்கரையை ஊக்குவிக்க கடற்கரை அதிகாரிகள் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன்போது முன்வைத்தார்.

அத்துடன், அருகம்பே போன்ற உலாவல் இடங்களில் சமமான ஆற்றலைக் கொண்ட ஜப்பானின் மியாசாகி கடற்கரையை ஊக்குவிப்பது போல், அருகம்பே கடற்கரையை உள்ளூர் அதிகாரிகளால் சர்வதேச உலாவர்களுக்காக ஊக்குவிக்கப்படும் எனவும் ஷிம்பேய் மட்ஷிதாவிடம் ஆளுநர் கூறினார்.

அருகம்பே கடற்கரையை சர்வதேச உலாவர்களுக்கு ஊக்குவிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஷிம்பேய் மட்ஷிதா ஆளுநரிடம் உறுதியளித்தார். மேலும் ஜப்பானிய சுற்றுலாப் பயணிகளுக்காக கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தின் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவது குறித்தும் ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடினார். அதற்கும் ஷிம்பேய் மட்ஷிதா தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

# சிறுவர் விளையாட்டரங்கை புனரமைத்து தரக் கோரிக்கை

*நற்பிட்டிமுனை செய்தியாளர்*

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென கட்டப்பட்ட கல்முனை இஸ்லாமாபாத் வீடமைப்புத் திட்டத்தின் ஓர் பகுதியாக அமைக்கப்பட்ட சிறுவர் விளையாட்டரங்கு பாவனைக்குதவாத நிலையில் புல் பூண்டுகளுடன் காணப்படுவது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிப்பதோடு அதனை திருத்தித்தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

காலம்பூராகவும் மாணவர்கள் வெறும் கற்றலில் மாத்திரம் கவனம் செலுத்தாது விளையாட்டிலும் ஆர்வம் செலுத்துமாறு கல்வியியலாளர்கள் கருத்து வெளியிட்டிருக்கையில், பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மாணவர்களை எவ்வாறு தேற்றுவது, ஆற்றுப்படுத்துவதெனவும் கேள்வி எழுப்புகின்றனர். மேலும் அவர்கள் இவ்வாறு கற்றல் மற்றும் விளையாட்டுகளில் ஈடுபடாது போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவதற்கு இதுவும் ஒரு காரணமெனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட நகர அதிகாரிகள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் சமூகசேவை அமைப்புகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி உடனடியாக திருத்த நடவடிக்கை மேற்கொள்வது காலத்தின் தேவை எனவும் குறிப்பிடுகின்றனர்.

# தேநீர் இடைவேளைக்கு நேரம் ஒதுக்குக

## தனியார் பஸ் சேவையாளர்களிடம் கல்முனைவாழ் பயணிகள் வேண்டுகோள்

*நற்பிட்டிமுனை செய்தியாளர்*

திருகோணமலை மாவட்டத்தில் சேவையாற்றும் அரச ஊழியர்கள் கடமைக்கு உரிய வேளைக்குச் செல்ல அதிகாலை வேளையில் நான்கு மணிக்கு கல்முனை இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சேவையில் ஈடுபட்டு வருகின்றமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

கல்முனையிலிருந்து புறப்படும் பஸ்கள் சரியாக ஐந்து மணி கடந்த நிலையில் திருகோணமலையை சென்றடைகின்றன. இக்காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்து பஸ் தேநீர் இடைவேளைக்கென நேரம் ஒதுக்கும் நிலையில் ஏன் தனியார் பஸ் போக்குவரத்தினர் இதனை பின்பற்றுவதில்லையென பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

சிறுநீரக நோயாளர்கள், குறிப்பிட்ட வேளைக்கு சாப்பிடும் பழக்கமுள்ள பிரயாணிகள் என இன்னோரன்னோர் இதனால் பெரும் அசௌகரியங்களை அடைகின்றனர்.

எனவே, கல்முனையில் இருந்து புறப்படும் தனியார் பஸ் சேவையாளர்கள் பிரயாணிகளின் நலன் கருதி தேநீர் இடைவேளைக்கென நேரத்தை ஒருக்கி இக்குறையினை நிவர்த்திக்க நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**போதைப்பொருள் பாவித்து வாகனங்கள ஓட்டினால் உடனடி சட்ட நடவடிக்கை எடுக்க போறாங்களாம் எண்டு பொலிசார் சொல்லுறாங்க எலுவா? அவங்கட சட்டம் நமக்கு தெரியாதாஅப்ப இனித்தான் பொலிசாருக்கு நல்ல வருமானத்த ஈட்டப்போறாங்க. போதை உண்டு வாகனம் ஓட்டினாலும் சாரதிகள் ஐந்நூறு ஆயிரம் நோட்ட நீட்டினால் எல்லாச்சட்டமும் தானாக மாறும். இது நம்மட ஸ்ரீலங்கா நாட்டுல இருக்கிற எழுதப்படாத சட்டமாச்சே புறகு என்னத்த புடுங்கப்போறாங்க!**

# குழாய் வெடித்து நீர் வீண் விரயம்

## அதிகாரிகளின் அசமந்தம் குறித்து மக்கள் விசனம்

*கந்தளாய் செய்தியாளர்*

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் நீர் வழங்கல் பாவனையாளர் அலுவல்கள் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் குடிநீர் குழாய் வெடித்து நான்கு வருடகாலமாக நீர் வீண் விரயமாகிக் கொண்டிருப்பதாக அப்பகுதிவாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பேராற்றுவெளி பழைய பலநோக்கு கூட்டுறவு நிலையத்துக்கு முன்னால் உள்ள பிரதான வீதியினூடாக செல்லும் பிரதான குழாய் வெடித்துள்ளதால் குடிநீர் வீண் விரயமாகி வருகின்றது.

இவ்வாறு குடிநீர் வடிகான்களில் வடிந்து ஓடிக்கொண்டிருக்கிறது. இவை தொடர்பாக கந்தளாய் நீர்ப்பாசன அலுவலகத்துக்கு பல முறை எழுத்துமூலம் அறிவித்தும் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, நீர் வீணாகுவதை கூடிய விரைவில் அதிகாரிகள் தடுத்து நிறுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தொழுநோய் ஒழிப்பு திட்டமிடல் கலந்துரையாடல்

*பாறுக் ஷிஹான்*

தொழுநோய் ஒழிப்பு திட்டமிடல் கலந்துரையாடல் அரச சார்பற்ற பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாநாட்டு அறையில் செவ்வாய்க் கிழமை(20) நடைபெற்றது.

பிராந்திய தொற்று நோய்த் தடுப்பியலாளர் வைத்தியர் எம்.ஏ.சீ.எம்.பஸாலினால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த கலந்துரையாடலில் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ.வாஜித், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர், சுகாதார வைத்திய அதிகாரிகளும் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் கலந்து கொண்டதுடன் ADT நிறுவனத்தின் சார்பில் அதன் பணிப்பாளர் ரகு பாலசிங்கம், பிராந்திய முகாமையாளர்



செல்வரத்தினம் ஜெபசுதன், செயற்றிட்ட முகாமையாளர் ரகந்தா அபேயக்கோன், செயற்றிட்ட உத்தியோகத்தர் என்.வேனுகோபன் உள்ளிட்ட குழுவினரும் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்தியத்தில் தொழுநோயை கண்டறிவதற்கான பரிசோதனைகளை விரிவுபடுத்தி தொழுநோயை பூரணமாக கட்டுப்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து இக்கலந்துரையாடலின் போது பணிப்பாளர் வலியுறுத்தியதுடன் இதற்காக அரசு சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பை மேலும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் மடிக்கணினிகள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# புனரமைப்புச் செய்யப்பட்ட இரு வீடுகள் கையளிப்பு

*மட்டக்களப்பு செய்தியாளர்*

மட்டக்களப்பு போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் பிரிவின் மாலையர்கட்டு மற்றும் கோவில்போரதீவு ஆகிய இரு இடங்களில் புனரமைப்புச் செய்யப்பட்ட இரண்டு வீடுகள் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு செவ்வாய்கிழமை(20) இடம்பெற்றது.

இலங்கையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுவரும், வன்னிஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் அதன் அதிகாரிகளால் உரிய பயனாளிகளிடம் வீடுகள் கையளிக்கப்பட்டன.

இதன்போது வன்னிஹோப் நிறுவனத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எம்.ரி.பாரீஸ் மற்றும் அதன் இணைப்பாளர்கள், போரதீவுப்பற்று பிரதேச செயலக அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

தன்னார்வ தொண்டு நிறுவனமாக செயற்பட்டுவரும் வன்னிஹோப் நிறுவனம் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் தமிழ், முஸ்லிம் மற்றும்




சிங்கள மக்களுக்கும் கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை எதுவித வேறுபாடுகளுமின்றி சேவை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சா.தர பரீட்சை எழுதியோருக்கான விசேட தர்பிய்யா செயலமர்வு

*அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்*

அட்டாளைச்சேனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபையின் ஆதரவுடன் ஜம்இய்யதுல் உலமா சபையின் அட்டாளைச்சேனைக் கிளை ஏற்பாடு செய்த க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட தர்பிய்யா செயலமர்வு ஞாயிற்றுக்கிழமை (18) அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது.

ஜம்இய்யதுல் உலமா சபையின் அட்டாளைச்சேனைக் கிளைத் தலைவர் மௌலவி யு.எல்.நியாஸ் தலைமையில் பெரிய பள்ளிவாசல் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இச்செயலமர்வில் கல்முனை நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எல்.ரசீட், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.எம்.பிர்னாஸ் மற்றும் கல்விமான்கள், மார்க்க உலமாக்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் வளவாளர்களாகவும் செயற்பட்டனர்.

இங்கு மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுகள் வரும்வரையான காலப்பகுதியிலும் உயர்தரக் கல்வியை





மேற்கொண்டு உயர்தரப் பரீட்சை எழுதும் வரையான காலப்பகுதி வரைக்கும் பிழையான செயற்பாடுகளிலும் பழக்கவழக்கங்களிலும் ஈடுபடாமல் தமது எதிர்காலத்தை வளமானதாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென கருத்துரைகள் வழங்கப்பட்டன.

நாட்டில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பழக்கம், புகை பிடித்தல், நாகரிக மோகம், பிழையான பொழுதுபோக்குகள், மாணவர்களை திசை மாற்றுவதால் எதிர்காலத்தில் குடும்பம், சமூகம் என்று பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடவுள்ளதாகவும் இங்கு வளவாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது.

ஜம்இய்யதுல் உலமா சபையின் அட்டாளைச்சேனைக் கிளை மாணவர்களின் முன்னேற்றத்துக்காக பல நிகழ்வுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கடவுச்சீட்டுக்கு விரல் அடையாளம் பெறும் நடவடிக்கை சம்மாந்துறையில் ஆரம்பம்




*சம்மாந்துறை செய்தியாளர்*

கடவுச்சீட்டு வழங்கும் புதிய திட்டத்துக்கான கைரேகைகளை பதிவு செய்யும் நடவடிக்கை சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் புதன்கிழமை(21) காலை 8.30 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனை அம்பாறை மாவட்ட அரச அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நாடளாவிய ரீதியிலுள்ள 51 பிராந்திய செயலகங்களில் கடவுச் சீட்டு பெற்றுக்கொள்வதற்கான விரல் அடையாளத்தைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை மற்றும் பொத்துவில் ஆகிய பிரதேச செயலகங்கள் கடவுச் சீட்டுப் பெற்றுக்கொள்வதற்கான கைரேகை எடுக்கும் பிரதேச செயலகங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.பிரதேச செயலகங்கள் ஊடாக நாளாந்தம் சுமார் 765 பேரின் கைரேகைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தனியார் கல்வி நிறுவனங்கள் விரும்பிய வகையில் பாடக் கட்டணங்களை வசூலிப்பதாக குற்றச்சாட்டு

தனியார் கல்வி நிலைய வகுப்புகளுக்குச் செல்லும் ஏழை மாணவர்களின் நன்மை கருதி அவர்கள் பயிலும் பாடங்களுக்கான கட்டணங்கள் உள்ளூராட்சி சபைகளினால் நிர்ணயிக்கப்பட வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக தனியார் வகுப்புகளுக்குச் சென்று கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் சூழ்நிலையில் பல தனியார் கல்வி நிறுவனங்கள் பாடங்களுக்கான கட்டணங்களை தமக்கு விரும்பிய வகையில் அதிகரித்து வசூலிப்பதாகவும் ஒவ்வொரு கல்வி நிலையங்களும் போட்டிபோட்டுக்கொண்டு வெவ்வேறு அளவுகளில் கட்டணங்களை அறவிடுவதாகவும் பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

சில தனியார் கல்வி நிறுவனங்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் தமது பிள்ளைகளின் கல்வி கடுமையாகப் பாதிக்கப்படுகின்றது என்றும் போட்டி மிகுந்த சமூகக் கட்டமைப்பில் தாமும் சமாந்தரமாகத் தமது பிள்ளைகளின் கல்வி விருத்தியில் கவனம் செலுத்த வேண்டியிருப்பதால் பெரும் பொருளாதாரப் பாதிப்புகளை எதிர்கொள்வதாகவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தனியார் கல்வி நிறுவனங்களின் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் கல்வி, நிர்வாக மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பன ஒன்றிணைந்து ஏழை மாணவர்கள் பாதிக்கப்படாத வகையில் முறையான திட்டங்களை வகுக்க வேண்டும் எனவும் உரிய ஒழுங்கை மீறும் கல்வி நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் எனவும் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

## அசத்தல் யோகா....



ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21ஆம் திகதி சர்வதேச யோகா தினமாக கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு நேற்று ஜம்மு - காஷ்மீரின் உதாம்பூரிலுள்ள மைதானமொன்றில் பொதுமக்கள் சிலர் யோகாவில் ஈடுபட்டனர். இதில் பங்கேற்றிருந்த நாய் ஒன்றும் மனிதர்களை போல, விதவிதமாக யோகா செய்து அசத்தியுள்ளது.

### ஒடிசா ரயில் விபத்து:

# 291பேர் உயிரிழப்பு; இன்னும் 18 பேரை காணவில்லை

### சி.பி.ஐ. விசாரணை வளையத்திலிருந்த ஜூனியர் என்ஜினியர் தலைமறைவு



ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 291ஆக அதிகரித்துள்ள நிலையில், விபத்தில் சிக்கிய 18 பேரை இன்னும் காணவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது. காணாமல் போனோர் பலரின் உறவினர்கள் அளித்த முறைப்பாட்டையடுத்து விபத்தில் சிக்கிய ரயில் பெட்டிகளை சோதனையிட திட்டமிடப்பட்டுள்ளது.


மேலும், ஒடிசா ரயில் விபத்து தொடர்பான வழக்கில் தொடர்புடைய சோரா செக்சன் ரயில்வே சிக்னல் இளநிலை பொறியியலாளர் (சிக்னல் ஜூனியர் என்ஜினியர்) குடும்பத்துடன் தலைமறைவான நிலையில், அவரது வீட்டுக்கு சி.பி.ஐ. அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

ஒடிசாவின் பாலசோர் மாவட்டம் பஹாநகர் பஜார் ரயில் நிலையம் அருகே கடந்த 2ஆம் திகதி 03 ரயில்கள் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் 288 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்த 1000க்கும் மேற்பட்டோர் பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் கட்டாக் எஸ்.சி.பி. வைத்திசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிலர் உயிரிழந்ததையடுத்து, ரயில் விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 291ஆக அதிகரித்துள்ளது. ஒடிசா ரயில் விபத்து தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடைபெற்று வருகிறது.

### மாயமான நீர்மூழ்கி:

# கடலுக்கடியிலிருந்து வரும் சப்தம்: அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள்?

## தேடுதல் பணிகள் தீவிரம்




நூறு ஆண்டுகளுக்கு முன்னர் மூழ்கிய டைட்டானிக் கப்பலை பார்வையிட சுற்றுலா சென்ற மாயமான நீர்மூழ்கியை தேடும் பணியில் திடீர் திருப்பமாக, கடலுக்கடியில் ஓரிடத்திலிருந்து சப்தம் வருவதாக கனடா விமானப் படை விமானம் கண்டுபிடித்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இதனால், சுற்றுலா நீர்மூழ்கியை தேடும் பணி சப்தம் வந்த இடத்துக்கு மாற்றப்பட்டிருப்பதாக அமெரிக்க கடலோரக் காவல்படை தெரிவித்துள்ளது.

அட்லாண்டிக் பெருங்கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலை பார்வையிடுவதற்காக 05 சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் சென்று மாயமான நீர்மூழ்கிக் கப்பலைத் தேடும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

பிரித்தானிய தொழிலதிபர் ஹமிஷ் ஹார்டிங், பாகிஸ்தானின் பெருங்கோடீஸ்வரர் ஷஸாதா தாவூத் (Shahzada Dawood ), அவரது மகன் சுலைமான் உட்பட 05 பேர், டைட்டன் என்ற 21 அடி நீள சுற்றுலா நீர்மூழ்கிக் கப்பலில் டைட்டானிக் கப்பல் நோக்கி சாகச பயணத்தை கடந்த ஞாயிறன்று தொடங்கினர்.

பத்தாயிரத்து 400 கிலோ எடையிலான அந்த நீர்மூழ்கிக் கப்பல், கடலுக்குள் இறங்கிய இரண்டே மணி நேரத்தில் கட்டுப்பாடு அறையுடனான தொடர்பை இழந்தது. 96 மணி நேரத்துக்கு மட்டுமே அந்த நீர்மூழ்கியில் ஓட்சிசன் விநியோகம் இருப்பதால் அமெரிக்க மற்றும் கனடா நாட்டு கடலோர காவல்படையினர் கப்பல்கள், ஹெலிகொப்டர் மூலம் தேடுதல் வேட்டையை தீவிரப்படுத்தியுள்ளன. மூன்று நாட்களுக்கும் மேலாக தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.




நீர்மூழ்கி மாயமானது மிகவும் ஆழமான பகுதி என்பதாலும், அங்கு வானிலை மிக மோசமாக இருப்பதாலும் மீட்புப் பணிகளில் மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், அவ்வளவு ஆழத்திலிருந்து நீர்மூழ்கியை மீட்பதற்குப் போதுமான உபகரணங்கள் அமெரிக்கா, கனடாவிடமே இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நீர்மூழ்கிக் கப்பலிலிருப்பவர்கள் சுமார் 96 மணி நேரம் சுவாசிப்பதற்கு மட்டுமே ஓட்சிசன் இருப்பதாகக் கூறப்படும் நிலையில், அவர்களை மீட்பதற்கான பணியில் ஈடுபட்டு வரும் குழுவினர் கடலின் ஆழத்தோடு மட்டுமில்லாமல் குறைந்து வரும் கால அவகாசத்தோடும் போராடி வருகின்றனர்.

இதில் திடீர் திருப்பமாக, கடலுக்கு அடியிலிருந்து வரும் சப்தத்தைத் தொடர்ந்து நீர்மூழ்கியை கண்டுபிடித்துவிடுவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது.

## உலக செய்திகள்

### ஹொண்டுராஸ் பெண்கள் சிறையில் கலவரம்

#### 41 பேர் உயிரிழப்பு



ஹொண்டுராஸில் பெண்கள் சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் 41 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் தலைநகர் டெகுசிகல்பாவிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பெண்கள் சிறையில் 900 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை (20) அதிகாலை சிறையில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக மாறியது. இதில், சிறையின் ஒரு பகுதியில் தீ விபத்தும் ஏற்பட்டது.

தீயில் சிக்கியும் மோதலில் காயமடைந்தும் 41 பேர் உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வரும் நிலையில், சிறையிலிருக்கும் ஏனைய கைதிகளின் நிலையை அறிய சிறைச்சாலைக்கு வெளியே அவர்களது உறவினர்கள் குவிந்துள்ளனர்.

### வட்ஸ்அப்பில் அறிமுகமாகும் புதிய அம்சம்!

**வட்ஸ்அப் தளத்தில் பயனர்கள், தெரியாத நபர்களிடமிருந்து தங்களுக்கு வரும் அழைப்புகளை சத்தமின்றி சைலண்ட் மோடில் வைக்கும் Silence Unknown Callers என்ற புதிய அம்சம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பயனர்கள் தங்களுக்கு வரும் தேவையற்ற அழைப்புகள் மற்றும் தெரியாத நபர்களின் தொல்லை அழைப்புகளின் இம்சையில் இருந்து தப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

## பரபரப்பான ஆஷஸ் ஆட்டத்தில் த்ரில் வெற்றிபெற்ற ஆஸி.



வரலாற்று சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்தின் பர்மிங்காமில் நேற்று முன்தினம் நிறைவுக்குவந்த முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது.

முதல் டெஸ்ட் போட்டியில் கடைசி நாள் ஆட்டம் நேற்று முன்தினம் விறுவிறுப்பாக நடைபெற்றது. முதல் இன்னிங்ஸின் முதல் பேட்டிங்கில் களமிறங்கிய இங்கிலாந்து அணி 78 ஓவர்கள் முடிவில் 08 விக்கெட்டுகளை இழந்து 393 ஓட்டங்கள் குவித்திருந்த நிலையில் டிக்ளேர் செய்தது. இதனை தொடர்ந்து 393 ஓட்டங்கள் என்ற முன்னிலையுடன் முதல் இன்னிங்ஸில் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 116.1 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 386 ஓட்டங்கள் குவித்தது.

இதையடுத்து, 07 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய இங்கிலாந்து அணி 66.2 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 273 ஓட்டங்கள் குவித்தது. 282 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆஸி. அணிக்கு இறுதி நாளில் வெற்றி பெற 174 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அதே சமயம் இங்கிலாந்து அணிக்கு 07 விக்கெட்டுகள் தேவைப்பட்டன.

பரபரப்பாக நடைபெற்ற இறுதிநாள் ஆட்டத்தில் 92.3 ஓவர்கள் முடிவில் அவுஸ்திரேலிய அணி 08 விக்கெட்டுகளை மட்டும் இழந்து த்ரில் வெற்றிபெற்றது. இரண்டாவது போட்டி 28ஆம் திகதி ஆரம்பமாகிறது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## 9இல் இலங்கை வரும் பாகிஸ்தான் அணி




2023 - 2025ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக பாபர் அஸாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் நிலையில் அதற்கான போட்டி அட்டவணை உத்தியோகபூர்வமாக வெளியாகியுள்ளது.

குறித்த டெஸ்ட் தொடரில் ஆடும் பாகிஸ்தான் அணி அடுத்த மாதம் 9ஆம் திகதி இலங்கையை வந்தடையவுள்ளது. 11ஆம் திகதி 02 நாட்கள் கொண்ட பயிற்சிப்போட்டி நடைபெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி ஜூலை 16ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரை காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது போட்டி ஜூலை 24 - 28ஆம் திகதிவரை இரண்டாவது போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## கின்னஸ் சாதனை படைத்த ரொனால்டோ



**உதைபந்து உலகின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ 200 சர்வதேச போட்டிகளில் விளையாடிய முதல் வீரர் என்ற வரலாற்று சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.**

**போர்த்துக்கல் உதைபந்து அணியின் தலைவரான கிறிஸ்டியானோ ரொனால்டோ, ஐஸ்லாந்துக்கு எதிரான யூரோ 2024 தகுதிச் சுற்று ஆட்டத்தில் பங்கேற்றதன் மூலம் இந்த வரலாற்று சாதனையை நிகழ்த்தியுள்ளார். 38 வயதான ரொனால்டோ இந்த போட்டியில் 89ஆவது நிமிடத்தில் அடித்த ஒரு கோல் மூலம் போர்த்துக்கல் அணி 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.**

**ரொனால்டோவின் இந்த சாதனையை குறிக்கும் வகையில் அவருக்கு கின்னஸ் சாதனைச் சான்றிதழும் போட்டிக்கு முன்னதாக வழங்கப்பட்டது. ரொனால்டோ கடந்த 2003ஆம் ஆண்டு கஸகஸ்தானுக்கு எதிராக அறிமுகமானதிலிருந்து தற்போது வரை 200 சர்வதேச போட்டிகளில் விளையாடிய முதல் ஆடவர் உதைபந்து வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.**

## குப்பைகளை அள்ளிய சிம்பாப்வே ரசிகர்கள்

*(ரமணி)*

2023 உலகக்கிண்ண தொடரின் தகுதிச் சுற்று போட்டிகள் சிம்பாப்வே நாட்டில் நடைபெற்று வருகின்றன. இதில் சிம்பாப்வே - நேபாளம் ஆகியவற்றுக்கிடையேயான போட்டி ஹராரேயில் உள்ள ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த போட்டியில், சிம்பாப்வே அணி 06 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. போட்டி முடிந்ததும் சிபாப்வே ரசிகர்கள் ஸ்டேடியத்தை சுத்தம் செய்து அனைவரின் மனதையும் வென்றனர். ரசிகர்கள் மைதானத்தை சுத்தம் செய்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



## அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் கழக ஏற்பாட்டில் மின்னொளி கிரிக்கெட் சுற்றுப்போட்டி

*(எஸ். அஷ்ரப்கான்)*

அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 42ஆவது ஆண்டு நிறைவினையொட்டி, அக்கழகத்தினால் மாபெரும் மின்னொளி மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

செக்டோ ஸ்ரீலங்கா அமைப்பின் பிரதான அனுசரணையில் இடம்பெறவுள்ள இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டி அட்டாளைச்சேனை கடற்கரை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. அணிக்கு 08 பேர் 05 ஓவர்கள் கொண்ட மேற்படி கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

குறித்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கு ஆர்வமுள்ள அணிகள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு 075-202 4203, 075-241 3642, 075-292 8986 தங்களது அணிகளை பதிவு செய்து கொள்ள முடியும்.

## விம்பிள்டனுடன் விடைகொடுக்கும் கோன்டாவெய்ட்



எஸ்தோனியா நாட்டின் முன்னணி டென்னிஸ் வீராங்கனை அனெட் கோன்டாவெய்ட் டென்னிஸ் அரங்கிலிருந்து ஓய்வுபெறும் செய்தியை அறிவித்துள்ளார்.

அனெட் கோன்டாவெய்ட் தற்போது தரவரிசையில் 79ஆவது இடத்தில் இருக்கிறார். அதிகபட்சமாக 2ஆவது இடம் வரை முன்னேறியுள்ள அவர் இதுவரை 06 பட்டங்களை வென்றுள்ளார். 2020ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய ஓபனில் காலிறுதியை எட்டியது, கிராண்ட்ஸ்லாமில் அவரது சிறந்த செயல்பாடாகும்.

இந்த நிலையில் 27 வயதான கோன்டாவெய்ட் அடுத்த மாதம் லண்டனில் நடக்கும் விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் போட்டியுடன் சர்வதேச டென்னிசில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.



***நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை பழைய மாணவர்களினால் ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட கட்டார் வாழ் இலங்கையர்களுக்கான இரட்டையர் பெட்மிண்டன் சுற்றுப்போட்டி தொடரில் நண்பர்கள் பெட்மிண்டன் கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. இந்த போட்டியில் சஹி மற்றும் தாணு ஆகியோர் நண்பர்கள் கழகம் சார்பில் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். சுற்றுத் தொடரின் ஆட்டநாயகன் விருதை சஹி தனதாக்கிக் கொண்டார்.***

***(மாளிகைக்காடு செய்தியாளர்)***

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7